பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (20.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 235

# சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஆண்டால் அது நாட்டுக்குப் பேராபத்து!

## இலங்கை சிங்களவர்களாலேயே ஆளப்படும் என்கிறார் தளபதி



கொழும்பு, ஜூலை 20

சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஒரு நாட்டில் ஆள்வார்களாயின் அது பெரும் ஆபத்துக்கு உரியதாகும். அது பெரும் பிரச்சினையாக அமையும்; அது நடைபெற முடியாத ஒன்றுமாகும்.

இந்த நாடு எப்போதும் 74 சதவீதத்தினரான சிங்கள இனத்தவராலேயே ஆளப்படும்.

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டுமெனில், நாம் உயிர்வாழ வேண்டுமானால், நாம் தியாகம் செய்தே ஆக வேண்டும். இந்த வேளையில் சாதாரண மக்களுக்கு பொருளாதாரக் கஷ்டங்கள் தவிர்க்க முடியாதவையே.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ...பொன்சேகா இவ்வாறு ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

அரச சார்பு ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவரது பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பண வீக்கம் 29 சத வீதத்தை தொட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சாதாரண மக்கள் பொருளாதாரக் கஷ்டங்களை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரமாகத் தேவை நிதி கிழக்கு மாகாண சபைக்கு!

### ஜனாதிபதியிடம் ஆளுநர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு போதிய நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை ஆளுநர் கொமடோர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதுவரை அழைத்து இந்திய அரசாங்கம் ஆட்சேபம்

புதுடில்லி, ஜூலை 20

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படும் சம்பவம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு, இலங்கைத் தூதுவர் சி.பி.ஜெயசிங்கவை நேற்று அழைத்து தமது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் கிழக்குப் பிரிவுச் செயலாளர் என். ரவி, இலங்கைத் தூதரை அழைத்து புது டில்லி அரசின் ஆழ்ந்த கண்டனத்தை வெளிப்படுத்தினார்.

இம்மாதம் 12ஆம் திகதி இந்தியக் கடலில்

(16 ஆம் பக்கம் பார்க்க)



## மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து தமிழகத்தில் நேற்று உண்ணா விரதப் போராட்டம்

சென்னை, ஜூலை 20

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்களை கண்டித்தும், இந்தச் சம்பவங்களை தடுக்க இந்திய, இலங்கை அரசுகள் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும் தமிழகம் முழுவதும் உண்ணா நிலைப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

ஆளும் தி.மு.கவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் மாவட்ட தலைநகரங்களிலும் கடற்கரை நகரங்களிலும் உணர்வு பூர்வமாக இடம்பெற்றுள்ளது.

சகல இடங்களிலும் (16 ஆம் பக்கம் பார்க்க)

# பாலமீன்மடு புதைகுழியில் 16 பேரின் எச்சங்கள்! 6 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டவர்கள்!!

### சட்டவைத்திய அதிகாரி உறுதி செய்திருப்பதாகத் தகவல்

கொழும்பு, ஜூலை 20

மட்டக்களப்பு, பாலமீன்மடுவில் கடந்த புதன்கிழமை புதைகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மொத்தம் பதினாறு பேர்களினுடையன என்று அவற்றை ஆய்வு செய்த சட்டவைத்திய அதிகாரி உறுதிசெய்துள்ளார்.

பொலிஸ் பேச்சாளர் எஸ்.ரஞ்சித் குணசேகர இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆறு வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் சடலங்களின் எச்சங்களே அவை என்றும் சட்ட வைத்திய அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாக பொலிஸ் பேச்சாளர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### காரைதீவு முருகன் ஆடிவேல் தீர்த்த விழாவில்

## இளைஞர்கள் இருவரை கடல் அலைகள் அள்ளின; மற்றும் நால்வர் காப்பாற்றப்பட்டனர்

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பு, காரைதீவில் நேற்று இடம் பெற்ற ஆடிவேல் தீர்த்த உற்சவத்தில் ஆறுபேர் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் நால்வர் காப்பாற்றப்பட்டனர்; இருவரின் கதி என்னவென்று தெரியவில்லை.

சரித்திரப் பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் தீர்த்த உற்சவத்திலேயே இந்தச் சோகம் தரும் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

முற்பகல் 11 மணியளவில் தீர்த்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது கடலில் நீராடியவர்களில் அறு வர் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டனர்.

பெரும் பிரயத்தனங்களின் பயனாக நான்கு பேர் காப்பாற்றப்பட்டனர்.

அடுத்தவாரம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் இருவரும் கடலில் இழுத்துச் செல்லப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஒடுக்கும் இலக்குடன் தென்னாசிய நாடுகள் புலனாய்வுப் பரிமாற்றம்

### கிரமமாக நடைபெறும் என்கின்றார் ஹோகன்...

கொழும்பு, ஜூலை 20

பயங்கரவாதத்தை ஒடுக்கும் பொருட்டு தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கு இடையிலான புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்களை எதிர்வரும் காலங்களில் கிரமமான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்

(16 ஆம் பக்கம் பார்க்க)




## ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கொழும்பு வருகின்றனர்

கொழும்பு, ஜூலை 20

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வருகைதருகின்றது.

பிரிட்டிஷ் சோசலிஸ்ட் குழுவைச் சேர்ந்த றொபேர்ட் ஈவான்ஸ் தலைமையில் வரும் இக் குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வர்த்தகச் சலுகை

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி. கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் பெருவிழாவின் முதல் நாள் நிகழ்வுகளின் போது முற்பகலில் நடைபெற்ற பண்பாட்டுப் பேரணியின் நிகழ்வுகளின் பதிவுகளில் சில இவை. 1. சிறுவர்களின் காவடி நடனத்துடன் பேரணி செல்கிறது. 2. மக்களைக் கவர்ந்த தீப்பந்த விளையாட்டு. 3. சிறுமியர் நடனத்துடன் பேரணி தொடர்கிறது. 4. கோப்பாய் பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ், மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலத்தில் வருகின்றனர். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# கலைகள் மனவளம் தருபவை; அவற்றைப் பயின்று எமது பாரம்பரியங்களைக் காப்பாற்ற வேண்டும்

## பண்பாட்டுப் பெருவிழாக்கள் அதற்கு உதவும் என்கிறார் துணைவேந்தர்



அச்சுவேலி, ஜூலை 20

அறிவைத் தேடும் அதே நேரத்தில் மன வளம் தரும் கலையையும் பயின்று எமது பண்பாட்டு பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும். இனம், மொழி, கலை தொடர்பான பண்பாட்டு பாரம்பரியங்கள் மறக்கப்படுமானால் அந்த இனமும் மொழியும் அழிந்துவிடும். இந்த வகையில் இத்தகைய பண்பாட்டு பெருவிழாக்கள் ஆண்டுதோறும் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்.

வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவையின் பண்பாட்டு பெருவிழாவின் முதல் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை வலி.கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றன.

இருபாலை சேனாதிராஜா முதலியார் அரங்கில் வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பண்பாட்டு பெருவிழா நிகழ்வுகள் நடைபெற்றன. துணைவேந்தர் என்.சண்முகலிங் கன் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய காலச்சூழலில் மனவளம் பேணப்பட வேண்டும். அறிவியலினால் அமைதியைப் பெற்றுவிட முடியாது. மனவளம் தரும் கலையினால்தான் வாழ்வில் அமைதியைப் பெறமுடியும். இன்று நடைபெறும் பண்பாட்டு பெருவிழா சமகால சமூகத்திற்கு தேவையான சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமையப் பெற்றிருப்பது மனதைத் தொடுகின்றது. பிரதேச பண்பாட்டு விழாக்கள் ஊடாக எமது கலைப்பாரம்பரியங்கள், கலை வடிவங்கள் மறைந்து போகாமல் பாதுகாக்கப்படுவதுடன் எதிர்காலச் சந்ததியினருக்கு எமது முதுபெரும் கலை வடிவங்களை கண்டுணர சந்தர்ப்பம் கிடைக்கிறது.

மாணவர்கள் அறிவுசார் நிலையில் எந்தப்படத்துறையை பயின்றாலும் மனவளம் தரும் கலை வடிவங்களை அழகியல் கலைகளில் ஒன்றைக் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். கலைகள் ஊடாகத்தான் மனதை வளப்படுத்தி வாழ்க்கையை சிறப்புடையதாகப் பேணமுடியும். தமிழ்ப் பாரம்பரியங்கள்,கலை வடிவங்கள் பண்பாட்டு விழாக்கள், ஊடாக பேணப்பட வேண்டும்.

எமது பண்பாட்டின் வேர்கள் கண்டு உணரப்பட்டு பேணப்படுவது இந்தக் காலச் சூழலில் மிகமிக அவசியம். இல்லாவிடில் எமது பாரம்பரியம் மறக்கப்பட்டுவிடும் - என்றார்.

யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா, யாழ்.கல்வியியல் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உட்பட பலர் விழா வில் உரையாற்றினர். (அ-11)

(15 ஆம் பக்கத்தையும் பார்க்கவும்)



## திருநாவுக்கரசு ம.வி அதிபருக்கு இன்று மணிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் த.கந்தையாவுக்கு பாடசாலை சமூகம் இன்று மணிவிழா எடுக்கின்றது.

வித்தியாலய மண்டபத்தில் உப அதிபர் திருமதி எஸ்.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பிரிவின் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, யாழ். தேசியற் கல்வியற் கல்லூரி முதல்வர் எஸ்.கே.யோகநாதன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் உட் பட பலர் பாராட்டுரை நிகழ்த்துவர்.

விழா நாயகனின் மணிவிழாவையொட்டிய மலர் வெளியிடப்படவுள்ளது. மலரின் வெளியீட்டுரையினை பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் க.தர்மராசா நிகழ்த்துவார்.

(1-207)

## உள்ளூராட்சி மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை20

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூட்டத்தில் நடைபெறும்.

திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாக நகர சபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

(1-207)

## யாழ்.றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கென இலவச வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் 24ஆம் திகதி வரையும் 28 ஆம் திகதியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடை பெறவுள்ளது. தினமும் காலை 8.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பிரதம பரீட்சகர்களாகக் கடமையாற்றிவரும் யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர்கள் கருத்தரங்கை நடத்தவுள்ளனர். (202)

## மத்தியஸ்தர் தினவிழா

சுன்னாகம், ஜூலை20

உடுவில் மத்தியஸ்தர் சபையின் இரண்டாவது ஆண்டு விழாவும் மத்தியஸ்தர் தின விழாவும் எதிர்வரும் புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சபையின் தலைவர் சு.தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனும், கௌரவ விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி ம.சதீசன், உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 20

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பாலர் கல்விச் சோலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 9மணிக்கு கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

செ.சனந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் 'போரூட்' நிறுவனத் திட்ட இணைப்பாளர் எல்.ஆர்.டுஷான் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சீவரெட்ணம் சிவபாக்கியம்



மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கல்வியங்காடு, புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீவரெட்ணம் சிவபாக்கியம் நேற்று (19.07. 2008) சனிக்கிழமை சிவபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரெட்ணத்தின் (C.T.B. சாரதி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - லெட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும், சந்தானலெட்சுமி (லண்டன்), இந்துமதி, காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சந்திரமகுலேஸ்வரி (லண்டன்), விஷ்ணுமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜரெட்ணம் மற்றும் தர்மகுலசிங்கம் (இந்துமதி), புஸ்பராணி, தவராஜா (லண்டன்), விமலாதேவி ஆகியோரின் மாமியாரும், இரத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, நேசம்மா, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரட்ணகுமார் (பிரான்ஸ்), ரமேந்திரகுமார் (லண்டன்), விஜியரசி (கொழும்பு), றம்மியா, கஜேந்திரன் (சிங்கப்பூர்), வித்தியா (வேம்படி மகளிர் கல்லூரி, 2009 A/L Bio), சயந்தன் (பிரான்ஸ்), செந்தூரன், மயூரன் (பிரான்ஸ்), தீபன் (இந்தியா), மதனதீபன், காண்டீபன் (லண்டன்), மோகனரூபன், ரகுரூபன், நிரோஜன், புஸ்பமாலா, நந்தன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சீ, துஸ்யந்தன், விதுர்ஷன், பிரவீன், லக்ஷனா, ஷாம், ஷானுசா, லக்ஷியா, மதுஷியா, அக்ஷயா, அதிஷயா, அபிஷயா ஆகியோரின் அன்புப் பூட்டியும், தங்கம்மா, கேசலட்சுமி, வைத்திலிங்கம், மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மகுலசிங்கம்(இந்துமதி)
மருமகன்.

*புலவனார் வீதி,*
*கல்வியங்காடு.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராகத் தன்னை நிலைநிறுத்துவதில் இலங்கை எப்போதும் இறுதி வெற்றியை ஈட்டியுள்ளது


ஜி.பார்த்தசாரதி

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா, இலங்கை சுதந்திரமடைவதற்கு முன் 1942 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அப்போது பத்திரிகையாளர்கள் இந்தியா பற்றிய சுதந்திர இலங்கையின் வெளியுறவுக் கொள்கை எப்படி இருக்கும் என்று டி.எஸ்.சேனநாயக்காவிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார்.

"விரும்பியோ விரும்பாமலோ (Willy-Nilly) இலங்கையின் நிலைப்பாடு எப்போதும் இந்தியா பக்கம்தான் அமையமுடியும்" என்பதே.

ஆனால், அவர் 1948 இல் சுதந்திரமடைந்த இலங்கையின் முதலாவது பிரதமரானபோது, இந்தியாவிற்குப் பாதகமான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைப் பிரித்தானிய அரசுடன் செய்து கொண்டார்.

அதன்படி இலங்கையில் திருகோணமலையில் பிரித்தானிய கடற்படைத்தளமும், கட்டுநாயக்காவில் பிரித்தானிய விமானப்படைத் தளமும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இந்தியாவிற்கு எதிராக இந்தியாவின் எதிர்நாடுகளுடன் கூட்டுச்சேரும் போக்கு சிங்களத் தலைவர்களிடம் எப்போதும் உண்டு.

பங்களாதேஷ் விடுதலைப் போராட்டம் தொடர்பாக 1970 ஆம் ஆண்டு இந்தோ-பாகிஸ்தானிய யுத்தம் வெடித்தபோது அப்போதைய

வாக இந்திய எதிர்ப்பு வாதத்தையும் அதன் வழி ஈழத்தமிழர் எதிர்ப்பு வாதத்தையும் தமது அடிப்படைக் கொள்கைகளாய் பின்பற்றி வருகின்றன.

ஆனால் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் சிங்கள ஆட்சியாளரை அணைத்து நடத்த வேண்டும் என்ற கொள்கையை எப்போதும் கொண்டுள்ளனர்.

சிங்கள ஆட்சியாளரை அணைத்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக ஈழத்தமிழரின் நலன்களை பலியிடுவதில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு எப்போதும் கவலை இல்லை.

**பார்த்தசாரதியை அகற்ற வைத்த ஜே.ஆர்**

பிரதமர் இந்திராகாந்தி காலத்தில் கொள்கை வகுப்புக் குழுத்தலைவராக இருந்த ஜி.பார்த்தசாரதி சிங்கள ஆட்சியாளர்களின் கபடத்தனங்களை அதிகம் விளங்கி வைத்திருந்தவர் ஆவார்.

அவரைப் போலவே ஏ.பி.வெங்கடேஸ்வரனும் திறமை மிக்க இராஜதந்திரி ஆவார்.

இதில் முதலாவது சிறந்த இராஜதந்திரியாயிருந்த ஜி.பார்த்தசாரதியை அரங்கிலிருந்து அகற்றுவதில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன வெற்றி பெற்றார்.

ஜி.பார்த்தசாரதி ஒரு தமிழன் என்றும், அவர் தமிழருக்கு சாதகமாகவே பேச்சுவார்த்தையில் நடந்துகொள்வாரென்றும் எனவே அவரை நீக்கினால்தான் தாம் பயனுள்ள முறையில் பேச முடியும் என்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்திய அரசை வற்புறுத்தியதன் பெயரில் ஜிபார்த்தசாரதி 1985 ஆம் ஆண்டு அரங்கைவிட்டு அகற்றப்பட்டார்.

அத்துடன் ஏ.பி.வெங்கடேஸ்வரனும் கொள்கை வகுப்பில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தனது வெளியுறவுச் செயலர் பதவியை 1987 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இராஜினாமாச் செய்தார்.


ஜே.ஆர்.


இந்திராகாந்தி

பேணப்பட்டு வருகின்றது.

**பௌத்த மகாசங்கமும் இலங்கை அரசும் பிரிக்க முடியாதவை**

இலங்கையில் அரசும் பௌத்த மகாசங்கமும் ஒன்றிலிருந்து இன்னொன்றை பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளவை.

இப்பின்னணியில் நோக்குகையில் சிங்கள அரசியல்வாதிகளின் இராஜதந்திரம் மிகவும் மெருகானதாய் இருக்க முடியும்.

பல கட்டங்களில் சிங்கள இராஜதந்திரம் இந்திய இராஜதந்திரத்தை மிகவும் இலகுவாகவே தோற்கடித்துள்ளது.

சிங்கள இராஜதந்திரமானது பலக்கோட்பாடில் நம்பிக்கை கொண்டதல்ல. அது தந்திரோபாயத்திலேயே நம்பிக்கை கொண்டது.

பெரிய இந்தியாவை அது பலத்தால் வெல்ல முடியும் என்று நம்பவில்லை.

தன்னை ஒரு மிகச் சிறிய அரசாக விளங்கிக்கொண்ட இலங்கை அரசு எப்போதும் தந்திரோபாயத்தின் மீதே தன்னை தக்கவைத்துக் கொண்டது.

இந்திய உபகண்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைத்தீவு 69 மடங்கு சிறியதாகும்.


**இலங்கை தன்னை தற்காத்துக் கொண்டமை அபூர்வ உண்மை**

இத்தகைய பிரமாண்டமான இந்தியாவுக்கு கீழ் தென்பகுதியில் உள்ள சிறிய இலங்கைத் தீவானது தன்னை 2,300 ஆண்டுகளுக்கும் மேலாய் இந்தியாவின் பிடியிலிருந்து தற்காக்க முடிந்துள்ளது என்பது ஓர் அபூர்வமான உண்மையாகும்.

இந்தியாவின் அரசியல் பிடிக்குள் நேரடியாய்ச் சிக்காது ஒரு சிறிய தீவால் 2,300 ஆண்டுகளுக்கும் மேல் தாக்குப்பிடிக்க முடிந்தமை சிங்கள இராஜதந்திரத்தின் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சில தற்காலிகமான பின்னடைவுகளுக்கு அநுராதபுர அரசு உட்பட்டிருந்த போதிலும் இறுதியில் சிங்களப் பௌத்த அரசு இந்தியாவிற்கு எதிராகத் தன்னை நிலை நிறுத்துவதில் இறுதி வெற்றியை இது வரை ஈட்டியுள்ளது.

இப்படி ஒரு கூட்டுமொத்தக் கணக்கை பார்க்க இந்திய இராஜதந்திரிகள்


ஏ.பி.வெங்கடேஸ்வரன்

சேரும் கொள்கையைப் பின்பற்றி வந்தது.

மற்றைய கட்சியான சுதந்திரக்கட்சி இந்தியாவுக்கு எதிரான ஆசிய நாடுகளுடன் கூட்டுச் சேரும் கொள்கையைக் கொண்டது.

**இந்தியாவுக்கு ஆபத்தான மகிந்த அரசின் போக்கு**

தற்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கம் இதில் இரண்டாவது வகையாகும்.

குறிப்பாக இந்தியாவிற்கு எதிரான இந்தியாவின் அயல்நாடுகளுடன் கூட்டுச்சேர்வதே மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் கொள்கையாகும்.

இது மகா ஆபத்தானது.

இலங்கையில் நிகழ்ந்து வரும் இன ஒடுக்கு முறையை வைத்துக்கொண்டு கொழும்பு

அரசியல்

அரசாங்கத்தை தம் கைக்குள் கொண்டுவர இந்தியாவின் எதிர் அரசுகள் முயன்று வருகின்றன.

இத்தகைய வாய்ப்பான நிலையைப் பயன்படுத்தி சிங்கள இராஜதந்திரிகள் ஒரு புறம் இந்தியாவிடம் தமது பேரம் பேசும் சக்தியை வளர்த்தும் மறுபுறம் இந்தியாவுக்கு அடிப்படைப் பலமான ஈழத்தமிழரை நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் நசுக்கியும் வருகின்றனர்.

இவ்வாறு அரங்கத்தில் காணப்படும் அத்தனை வாய்ப்புக்களையும் சிங்கள இராஜதந்திரிகள் தமது சாதகமாக்கிக் கொள்கின்றனர்.

உதாரணமாகப் பார்க்கையில் "தமிழ்பயங்கர வாதத்தை" வெற்றிகொள்ள இலங்கை அரசுக்கு இந்திய அரசு ஆயுத உதவிகளைச் செய்ய மறுக்குமிடத்து, தாம் இந்தியாவுக்கு விருப்பமில்லாத நாடுகளிடம் ஆயுதம் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு என்று சிங்கள ஆட்சியாளர் கூறி, இந்திய அரசிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இங்குள்ள கேள்வி என்னவெனில் யாரிடம் இலங்கை அரசு ஆயுதங்களை பெற்றால் என்ன அது தமிழரை அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றது என்பதேதான்.

எனவே, பாக்கிஸ்தானிடம் ஆயுதத்தைப்


என்.கே.நாராயணன்


சிவசங்கர்மேனன்

பெற்றால் என்ன? இந்தியாவிடம் ஆயுதத்தைப் பெற்றால் என்ன? அது தமிழரை அழிக்கப் பயன்படுத்தபடுகின்றது என்பதே உண்மை. யதார்த்தம்.

இது விடயத்தில் தனது இறுதி இலக்கை

# இந்திய ராஜதந்திரத்தைப் பல தடவைகள் இலங்கை ராஜதந்திரத்தால் ஏமாற்ற முடிந்தது

இலங்கைப் பிரதமராயிருந்த திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா பாக்கிஸ்தானிற்கு அனுசரணையாக நடந்து கொண்டார்.

அதாவது, பாக்கிஸ்தானிய இராணுவம் சிவில் உடையில் இலங்கைக்கூடாக விமானப் பயணங்களை மேற்கொள்ள பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வகை செய்து கொடுத்திருந்தார்.

இந்நிலையில் யுத்தம் முடியும் வரை இலங்கையை இராணுவ ரீதியாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை பீல்ட் மார்ஷல் மனேக்ஷா அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் வலியுறுத்தியபோது இந்தியப் பிரதமர் இராஜதந்திர வழிமுறையின் மூலம் இலங்கைப் பிரதமரை அணுகி கொழும்பிற்கூடான பாக்கிஸ்தானிய இராணுவத்தின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தினார்.

டி.எஸ்.சேனநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்.

மேற்படி இரண்டில் ஒரு கட்சிதான் இலங்கையில் மாறி மாறிப் பதவிக்கு வருவதுண்டு.

**ஜே.வி.பியின் அதி தீவிர இந்திய எதிர்ப்புவாதம்**

மேற்படி இரு கட்சிகளும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைத்தான் உலகரங்கில் மேற்கொள்கின்றன என்பது ஒரு வரலாற்றுப் போக்காய் உள்ளது.

மேற்படி இரு கட்சிகளுக்கும் அடுத்த பெரும் கட்சியாக இருப்பது ஜனதா விமுக்தி பெரமுன என்ற ஜே.வி.பி.யினர்.

இந்த மூன்றாவது கட்சியாகிய ஜே.வி.பி. மேற்படி இரு பெரும் கட்சிகளையும் விட அதி தீவிர இந்திய எதிர்ப்புவாதம் கொண்ட கட்சியாகும்.

இந்த வகையில் இலங்கைத்தீவில் உள்ள மூன்று முக்கிய சிங்களக் கட்சிகளும் தெளி

மேற்படி இரு பெரும் இராஜதந்திரிகளும் அரங்கத்தில் இல்லாதபோது சிங்கள ஆட்சியாளர்களால் ஏனைய இந்திய இராஜதந்திரிகளை இலகுவில் ஏமாற்றுவது சாத்தியப்பட்டது.

ஈழத்தமிழருக்கு ஏற்படும் எந்தவொரு பாதிப்பும் இந்தியாவின் நலனுக்கேற்படும் பாதிப்பாய் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்திய இராஜதந்திர வட்டாரங்களுக்குள் காணப்படும் உள்முரண்பாட்டை சரிவரக் கையாள்வதில் சிங்கள இராஜதந்திரிகள் கைவந்தவர்கள்.

மு.திரு

தொடர்ச்சியறாது 2,300 ஆண்டுகால நிறுவனமான பௌத்த மகாசங்கம் சிங்கள மக்களிடம் உண்டு.

எழுத்தும், அறிவும் கொண்ட பன்மொழிப் புலமைமிக்க, முற்றிலும் அரசியல் மயப்பட்ட ஒரு நிறுவனமாய் பௌத்த மகாசங்கம் உள்ளது.

பழைய வரலாற்று சித்தாந்தத்தினால் வற்றி இறுகிப்போயிருக்கும் இந்த பௌத்த

தவறக்கூடாது. ஈழத்தமிழரைத் தோற்கடித்து இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள மயமாக்கிவிட்டால் இறுதியில் இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு அந்நிய சக்திகளுடனும் இலகுவாக கூட்டுச் சேரலாம் என்பதே சிங்கள இராஜதந்திரத்தின் நோக்கு நிலையாகும்.

இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள பௌத்த மயமாக்கும் முயற்சியில் கிழக்கு மாகாணம் வரை பாரிய வெற்றியை இதுவரை சிங்கள அரசு எட்டியுள்ளது.

**ஈழத்தமிழர் விழுங்கப்படுகின்றனர்**

தன்வாயால் கொள்ளக்கூடிய அளவு சோற்றை உண்பது போல் சிங்கள அரசு நாளும் பொழுதும் படிப்படியாக ஈழத்தமிழரை விழுங்கி வருகின்றது.

கடந்த 60 ஆண்டுகளாக இது விடயத்தில் உறுதியாக கொள்கை நிலைப்பாட்டுடன் சிங்கள அரசு, ஈழத்தமிழரை ஏப்பமிட்டு வருகின்றது.

இப்போக்கை இந்திய அரசு தொடர்ந்து

# பார்த்தசாரதியை, வெங்கடேஸ்வரனை அகற்றி தான் நினைத்ததைச் சாதித்தவர் ஜே.ஆர்.

நிறுவனம் தொடர்ச்சியாக இந்திய எதிர்ப்பு வாதத்தையும் தமிழின எதிர்ப்பு வாதத்தையும் காவிப்பேணி வருகின்றது.

இத்தகைய தொடர்ச்சி குன்றாத நிறுவனத்தினால் அரசனைப் பேணும் இராஜதந்திர பாரம்பரியம் 2300 ஆண்டுகளுக்கு மேலாகப்

அசட்டை செய்யுமேயானால் இறுதியில் இதற்கு முதற்பலியாகப் போவது தமிழகமும் தென்னிந்திய மாநிலங்களுமே.

பதவிக்கு வரும் சிங்கள கட்சிகளுள் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி, இந்தியாவுக்கு எதிரான மேற்குலக அரசுகளுடன் கூட்டுச்

சிங்கள அரசு ஈட்டிக்கொள்கிறது.

மேலும், இலங்கையில் தமிழரை தோற்கடிப்பதன் மூலம் இறுதியிலும் இறுதியாக இந்தியாவை தோற்கடிப்பது என்ற இலக்கை சிங்கள அரசு முன்னோக்கியுள்ளது என்பதே பொருள்.★★★★★★★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எழுத்தறிவூட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து உரும்பிராய் கிருஷ்ணா நலன்புரி முகாமில் தங்கியுள்ள சிறார்களுக்கு எழுத்தறிவூட்டல் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்துள்ள காலத்தில் பாடசாலைக் கல்வியைத் தவறவிட்ட சிறுவர்களுக்கு யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (203-302)


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபன



நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு பூந்தாங்கள்

* நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
* றெடிமேட் ஆடைவகைகள்,

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

பான்சி ரகங்கள், வெடிங் கிவ்ற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்,
பூமாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
* சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

புதிய சாறிகள் சில்வர் ரச், அஸ்வினி, அநாரங்கி, வினோ, பிரியங்கா, கிரசி, கோபி சாறி, ராஜ்குரு சாறி, உருத்திகபிரகாஸ், குருவி, குசேலன், கல்பனா சாறி, லக்ஸ்சரி சாறிகள்.
அரவிந் மில் - மலிஸ்லா றெறின் 1 மீற்றர் 225 /=
அரவிந் மில் - சகோறி றெறின் 1 மீற்றர் 275 /=

G.S. லிங்கநாதன் அன்கோ
தலைமைத்தாபனம்: இல.13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: இல.47, பெரியகடை வீதி யாழ்ப்பாணம்.


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை20

சங்கானை இந்து இளைஞர் மன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இந்து இளைஞர் மன்ற விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் ப.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேசசபைச் செயலர் எஸ்.புத்திரசிகாமணி கலந்து கொள்வார். (203)


## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் இன்று 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (203-78)

## விண்ணகப் பிறப்பின் 31ஆவது நாள்

மண்ணில் 29 03 1922

விண்ணில் 20 06 2008



### அமரர் யோண் ஞானமுத்து

உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர்
திருமுன் வாழ்ந்திருப்பேன் தி.பா.116:

ஆலமரமாய் நீயிருக்க அதன் நிழலில் நாமிருந்தோம்
வான் மழையாய் நீ பொழிய அதன்
வளத்தில் நாம் வளர்ந்தோம் - இன்று
மலை நீ சாய்ந்ததாலே நாம்
நிலைகுலைந்து போனோம் - ஐயா
இறைவனோடு நீ இணைந்து இன்புற்றிருக்க
இறைஞ்சுகிறோம் நாம் இங்கு.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்.

தேவாலய வீதி,
மல்லாகம். (76498)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னைமடியில் 29 05 1944

ஆண்டவனடியில் 20 07 2001



### அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச்சபை)

எம் குடும்பத்தின் ஏற்றத்துக்காக உழைத்த
எம் தந்தையை ஆண்டவர் அழைத்து
ஏழாண்டுகள் ஆகிவிட்டன - ஆனாலும்
என்றும் எம்முடன் நிதமும் உடனிருந்து
எம்மை வழி நடத்துகின்றீர்கள் - அப்பாவே!
நேரில் வந்தெம் தவிப்பைப் போக்குவீர்களாக!

"மடத்துக்கடவை",
அல்வாய் மேற்கு,
அல்வாய். (76428)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள்.

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டைக்கும், யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கதிரவேலு சுபாஜினி என்பவருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரவும். 021 222 2610

## தவறிவிட்டது

திருமதி ரதி சந்திரநாதன் NIC (இல.545792591V) யா/இந்து மகளிர் கல்லூரிக்கும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஸ்ரூடியோ ஒன்றிற்குப் பெண்பிள்ளை தேவை.
தொடர்பு: விளம்பர இல. 3116,
மே/பா.உதயன்.
(76361)

## விற்பனைக்கு

சகல விதமான புறாவகைகள் (ஜயன், இஜிப்சன், றேசிங் கோமர், கிங்பிஜன், கிங்மொடீனா) உட்பட விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: R. ரவீந்திரமோகன்
கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.
T.P.: 0776446515
(76459)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### கந்தையா சின்னப்பிள்ளை
(காளியாச்சி)

மலர்வு
10.04.1927

உதிர்வு
20.06.2008

எங்கள் குடும்பத் தலைவி காலமான செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசை வழங்கியோருக்கும், மரணச் சடங்கில் பங்கு கொண்டோருக்கும் மற்றும் அனுதாபம், ஆறுதல் கூறியோருக்கும் உள்நாட்டில், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்/கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் தயவு செய்து
இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
ஐயர் வீதி, சாவகச்சேரி. (76437)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
04.05.1929



மறைவு:
01.08.2007

### அமரர் கலாநிதி
### அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A.,FCA.
(பட்டயக் கணக்காளர்)

முன்னாள் பேரவை உறுப்பினர் - யாழ்.பல்கலைக்கழகம், முன்னாள் போஷகர் - ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலிகிழக்கு, பருத்தித்துறை.

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மகள்:
திருமதி நளாயினி மூர்த்தி
(கனடா).

(சி/553790)

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### திருமதி
### கதிரவேலு பரமேஸ்வரி



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, ஹாமஸ் அவனியூவைவசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி கதிரவேலு பரமேஸ்வரி 15.07.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கதிரவேலுவின் (புகையிரத கங்காணி) அன்பு மனைவியும் தர்மேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), மகேஸ்வரன் (U.K.), கமலேஸ்வரி (ஆசிரியை, விபுலானந்த த.ம.வி, தெமட்டகொட), காலஞ்சென்ற குமரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் கலாநிதி க.சிவஞானம் (உதயா லொஜ் உரிமையாளர்), கலாரஞ்சினிதேவி (U.K.), அழகராஜா (மக்கள்வங்கி, ஒல்கொட் மாவத்தை) ஆகியோரின் மாமியும் மயில்வாகனம், காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ரஞ்சினி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), உதயதாஸ் (உதயா லொட்ஜ்), சத்தியதாஸ் (தாஸ் ரெஸ்ட்), அகீபன் (Doctor, U.K.), சோபிதா (U.K.), ஜெனன் (U.K.), அனந்தன் (மலேசியா), சுரேந்தன், லசிதா, ரசாந்தன், தியாகேஸ்வரன் (J.P.), குருசாந்தி, சுரேகா (ஆசிரியை, பலாந்தை த.வி., மத்துகம), ஆகியோரின் பேர்த்தியும் ஜீவினி, திவேதினி, தக்சா, சைனி, தருஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு 27, ஹாமஸ் அவனியூ, வெள்ளவத்தையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, ஹாமஸ் அவனியூ,
வெள்ளவத்தை.
தொ.பே.: 2588511, 2503552 (சி/553794)

தகவல்:
கலாநிதி க.சிவஞானம் (மருமகன்),
பொ.அழகராஜா (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சம் துடிதுடித்தோயும் அந்தக் கறுப்பு ஜூலை நிகழ்ந்து 25 வருடங்கள்

கறுப்பு ஜூலை நிகழ்ந்து, இன்னும் மூன்று நாள்களில் கால்நூற்றாண்டு - 25 வருடங்கள் ஆகின்றன.

அந்தக் கொடுமை நடந்த - நடத்தப்பட்ட நாள் வரும்போதெல்லாம் இந்த நாட்டிலுள்ள தமிழ் நெஞ்சங்கள் ஒரு தடவை துடித்து - துடிதுடித்தே ஓய்கின்றன.

அன்று தமிழ்மக்கள் இழந்த பொருள்களும், உயிர்களும் இந்த நாட்டில் தமிழர்களைத் தம் எதிர்காலம் பற்றி நன்றாகவே சிந்திக்கவைத்தன.

சிந்திக்க வைத்துக்கொண்டே இருக்கின்றன.

தொட்டாற்சிணுங்கி என்று ஒரு பூண்டு இருக்கின்றது. அதை ஒருவர் தொட்டால் போதும், உடனே சுருங்கிக் கொண்டுவிடும்.

இவ்வாறுதான், தமிழர்கள் எதையாவது செய்யமாட்டார்களா அவர்கள் மீது வன்முறைகளைத் தூண்டிவிடுவதற்கு? என்று காத்திருந்த சிங்களப் பேரினவாதிகளுக்கும், குண்டர் கும்பல்களுக்கும் இனவெறியர்களுக்கும், 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23ஆம் திகதியன்று திருநெல்வேலியில் இடம்பெற்ற சம்பவம் சாட்டாக அமைந்தது.

திருநெல்வேலியில் கண்ணிவெடியினால் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பொட்டலங்களாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு கனத்தையில் எரிக்கப்பட்டபோது அதனைக் கண்டு தீடீர் ஆத்திரம் கொண்டு சிங்களவர்கள் கிளந்தெழுந்தார்கள் என்று சிங்களத் தலைவர்கள் நியாயம் கற்பிக்க முனைந்த போதிலும் இப்படியான சம்பவத்துக்காக அவர்கள் காத்திருந்தார்கள் என்பதை பின்னர் நடந்தேறிய வெறியாட்டங்கள் நிரூபித்தன. சிங்களத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்களும் அதைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டின.

தமிழர் வீடுகளும், கடைகளும் அச்சொட்டாக இனங்காணப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன; தீக்கிரையாக்கப்பட்டன. வாக்காளர் பட்டியலை வைத்துக்கொண்டு தமிழர் வசித்த இடங்களைத் தேடிச் சென்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சிங்களத் தலைவர்கள் அதுவும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அந்நாள்களில் நாட்டின் எந்தெந்தப் பகுதிகளுக்குச் சென்றார்களோ அங்கெல்லாம் தமிழர்கள் அடித்து



நொறுக்கப்பட்டார்கள்; அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொலையுண்டவர்களின் எண்ணிக்கை சரியாக வெளியிடப்படவும் இல்லை.

மலையகத்தில் பல இடங்களில் தமிழ் மக்கள் இவ்வாறுதான் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம், நான் இரண்டுக்கும் தயார்'' என்று வீராவேசம் பேசிய அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அடிமனதில் தமிழர் தேசிய எழுச்சியை நசுக்கி விடுவதற்காக தீட்டப்பட்டிருந்த திட்டத்தின் ஒரு பகுதியாகவே இவை நிறைவேற்றப்பட்டதாக உணரக்கூடியதாக இருந்தது.

தமிழர்கள், போராட்டங்களில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் இராணுவத்தைக் கட்டவிழ்த்து விடுவேன் என்று கூறியிருந்தவர் அல்லவா, அவர்?

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 'அவ்ரோ' விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் குண்டுவெடிப்புக்குள்ளாகி நொருங்கியதையடுத்து, யாழ்ப்பாணத்தில் இளைஞர் எழுச்சியைக் குறிப்பிட்ட காலத்தில் நசுக்கிவிட்டுத் திரும்பும்படி தனது மருமகனான இராணுவத்தளபதியை இங்கு அனுப்பியிருந்தார். ஜே.ஆர்.

அந்தவேளையில் எத்தனை இளைஞர்கள் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு வீதிகளிலும் பற்றைக்காடுகளிலும் வீசப்பட்டுக் கிடந்தார்கள்? மறக்க முடியுமா? மறப்பதற்கு நெஞ்சுதான் இடந்தருமா?

இளைஞர்களின் எழுச்சியை ஜே.ஆரின் தந்திரத்திட்டங்களால்ஒழிக்க முடியவில்லை. மாறாக போர் முனைப்பும் எதிர் நடவடிக்கைகளுமே மேலோங்கின.

அவ்வாறான ஒரு சம்பவமே திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம்.

கொல்லப்பட்ட சிப்பாய்களின்

## மறந்து போகுமா! மறக்கத்தான் முடியுமா?

உடல்களை அவசர அவசரமாக ஏன் கொழும்பிற்கு அனுப்பினார்கள்? கொழும்பில் ஒட்டுமொத்தமாக கனத்தையில் கொண்டுபோய்த்தான் எரிக்க வேண்டுமா? அதற்கெல்லாம் ஒரு பின்னணி இருந்திருக்க வேண்டும்.

அன்றைய தினமே கொழும்பில் குழப்பம் தொடங்கியது. இரவிரவாகக் கொழும்புப் பிரதேசம் முழுவதும் இருந்த தமிழர்களின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கலவரத்தினால் தமிழ் மக்கள் அல்லோல கல்லோலத்துக்கு உள்ளானார்கள்.

கொலை, கொள்ளை, தீயிடல், சூறையாடல் தொடர்ந்தன. இவ்வளவுக்கும் நாட்டின் தலைவர்கள் என்று கூறிக்கொண்டவர்கள் கொழும்பில்தான் இருந்தார்கள். நினைத்திருந்தால் ஒருசில மணிநேரத்துக்குள் கலவரத்தை அடக்கியிருக்கலாம். செய்தார்களா?

அடுத்தநாள், அதற்கும் அடுத்த நாள் வரைக்கும் தீர்க்கமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. நாடுபூராகவும் சிங்களக் காடையர்கள் தம் இஷ்டப்படி, திட்டமிட்டபடி கொலை, கொள்ளை



களை நடத்திக் கொண்டிருந்த வேளையில், தமிழர் பிரதேசங்களில் ஆயுதப் படைகள் அட்டூழியங்களில் இறங் கியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 70 பேர் கொல்லப்பட்டதாக அறியவந்தது.

**தஞ்சம் புகுந்த நேரத்திலும் தாக்குதல்**

நாடு முழுவதிலும் தவித்துப்போன தமிழ் மக்கள் கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தார்கள். இந்த இடங்களையும் கூட காடையர்கள் தேடிச்சென்று தாக்குதல் நடத்தியிருந்தார்கள்.

ஜூலை 25ஆம் திகதி வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் 53 பேரில் 37 தமிழர்கள் காடையர்களாலும் சிங்களக் கைதிகளாலும் அடித் தும் குத்தியும் கொல்லப்பட்டனர். அவர் களில் குட்டிமணி, தங்கத்துரை போன்ற விடுதலை வீரர்களும் அடங்குவர்.

அத்தோடு முடியவில்லை. பேரினவாதிகளின் தாகம் அடங்கவில்லை. 27 ஆம் திகதி எஞ்சியிருந்தவர்களில் 15 பேரும் கொல்லப்பட்டனர்.

சிறைக்குக் காவலர்கள் இருந்தார்கள், அவர்களின் மேற்பார்வைக்கு அதிகாரிகளும் இருந்தார்கள். சிறைக்கூடத்துக்கு கதவுகளும் பூட்டுகளும் கூட இருந்தன. இந்தப் படுகொலைகள் நடந்தபோது அதிகாரிகள் எல்லோரும் எங்கே போனார்கள்? கொலை வெறிகொண்டு உள்ளே புகுந்தவர்களுக்குத் திறப்புகள் எவ்வாறு கிடைத்தன? கதவுகள் திறந்துதான் கிடந்தனவா?

இவைபோன்ற கேள்விகளுக்கு எப்பொழுதுமே விடை கிடைக்கப் போவதில்லை. ஏன் என்றால் அவை திட்டமிட்டுச் செய்யப்பட்டவை!

**வாக்குரிமை பறி போனபோதே......!**

என்று மலையகத்தமிழரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டதோ அன்றே தமிழர்களின் உரிமைகளைப் படிப்படியாகப் பறிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு விட்டது என்பதை மூதறிஞர் தந்தை எஸ்.ஜே.வி. மட்டுமே உணர்ந்திருந்தார். அந்தத் திட்டம் அமுலான கையோடு தமிழர் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாறை போன்ற பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மிகச் சாதுரிய மாக அமுலாகின.

இவைகளுக்கு எதிராகத் தமிழர்கள் கிளர்ந்து எழுந்தபோதெல்லாம் அவர்களின் தலைவர்களின் முன் அரைமந்திரி, முழுமந்திரிப் பதவிகள் எலும்புத் துண்டுகளைப் போல வீசப்பட்டன. அதற்கு மேலும் மூச்சுவிட்டால், அரச படைகள், பொலிஸ் கொமாண்டோக்கள் மற்றும் காடையர்களின் அடிதடிதர்பார் என்று அவ்வப்போது நடத்தப்பட்டன.

1956, 1958,1961, 1977, 1981 ஆகிய ஆண்டுகளின் பதிவுகள் இவைகளுக்குச் சான்று சொல்லும்.

இவைகளுக்கெல்லாம் - சிங்கள, பௌத்த தர்ம ராஜ்யத்தின் கொடூர ஆட்சிக்குச் சிகரம் வைத்தாற்போல் 1983 ஆம் ஆண்டுக் கலவரங்கள் அமைந்தன. இதைத்தான் ''சண்டே சில்-மண்டே கில்'' என்று நையாண்டி செய்திருந்தார் சௌமியமூர்த்தி தொண்டமான்.

ஆம், அந்தக் கறுப்பு ஜூலை கொடுமைகள் தமிழர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டதாக , தமிழர் எழுச்சியைத் தகர்த்துவிட்டதாக எண்ணிச் சிங்கள ஆட்சியாளர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த வேளையில், அது அந்தக் கலவரங்களில் உயிர் நீத்த செல்வங்களின் தியாகங்கள் வீண் போகாமல் உலகம் முழுவதும் இந்த நாட்டின்- பேரினவாதத்தின் - அவர்களால் பீற்றிக்கொள்ளப்படும் ஜனநாயகத்தின் பொட்டுக்கேட்டை பறைசாற்றி வைத்தது. தமிழ் இளைஞர்களின் எழுச்சி ஒழிந்தது என்ற கனவில் மூழ்கிப் போயிருந்த பேரினவாதிகளுக்கு இல்லை இல்லை அது இன்னும் பன்மடங்கு புத்தூக்கம் பெற்றுவிட்டது என்பதை நினைவூட்டுவதாகவும் அமைந்தது.

இந்த நிலைமை பற்றி 1990களில் யாழ்ப்பாணத்துப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

முனைப்போடு தலை நிமிர்ந்தார்கள் தமிழ் இளைஞர்கள், முற்றுப்புள்ளியை அழித்தார்கள், காற்புள்ளியோடு தொடங்கி அரைப்புள்ளியாகி சிங்கள அரசுக்கு கேள்விக்குறியாகி உலகத்திற்கு வியப்புக்குறியாகி....... சில நாடுகளில் பிரிவினைப் புரட்சிகளுக்கு இவர்கள் மேற்கோள் குறியும் ஆகிவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

வருடம்தோறும் இந்தக் கறுப்பு ஜூலை வரும்போதெல்லாம் அன்று உயிர் நீத்த தமிழ் இரத்தத்தின் இரத்தங்களின் நினைவு வரவே செய்யும். தமிழர் தம்மைத்தாமே ஆளும் நிலை வரும் வரை அவர்களுக்கு விமோசனமே இல்லை என்பதை அது நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

— வைகுந்தன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை நடத்தும்

# பண்பாட்டு பெருவிழாச் சிறப்பு மலர் - 20.07.2008

## ஆசிச்செய்தி



வலிகாமம் கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவை பண்பாட்டு விழாவை நடத்துவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனிதனுடைய வாழ்வைப் பெருமைப்படுத்துவது பண்பாடாகும். ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்கள் அமைந்துள்ளன. தமிழனுடைய பண்பாட்டு விழுமியங்கள் தனித்துவமானதும் எல்லா மக்களின் மனதைக் கவரக் கூடியனவாகும். இரண்டு நாள்கள் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்பண்பாட்டு விழா பல நிகழ்ச்சிகளினூடாக அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து வாழும் வாழ்க்கையை நல்லதொரு வாழ்க்கையாக வாழ வழிகாட்டுகின்றது. இப்பணியை செய்யும் பிரதேச செயலாளர் சீ.ஏ. மோகன்றாஸ் அவர்களையும் அவருடன் இணைந்து செயற்படும் அனைத்து உள்ளங்களையும் வாழ்த்துகின்றோம். இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

## பண்பாட்டைப் பேணவேண்டியது அவசியம்



ஒவ்வொரு இனமும், மதமும் பிரதேசமும் வெவ்வேறு விதமான பண்பாட்டின் கூறுகளால் ஆக்கப்பட்டுத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. தனது பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் எனும் எண்ணம் ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதின் அடியிலும் உறைந்து கிடக்கிறது. அதன் விளைவாகவே அவனது மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் கூடத் தன் பண்பாட்டு வடிவங்களைப் பேணி வருவதை அவதானிக்க முடிகிறது.

காலப்போக்கில் சில பண்பாட்டுக் கூறுகள் மருவி மாற்றம் பெற்றாலும் அவற்றின் அடிவேரினை பண்பாட்டு விழாக்கள் மூலம் மனிதன் நினைவிலிருத்திக் கொள்கிறான். அந்த வகையில் வலி-கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படுகின்றபண்பாட்டுப் பெருவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

பண்பாட்டைப் பேணவேண்டும் எனும் ஆவலுடனும் கலைகளை வளர்த்தெடுக்கவேண்டும் எனும் அவாவுடனும் முன்னெடுக்கப்படுகின்ற இந்த விழா மிகவும் சிறப்புற நிகழ்வதற்கு இறையருள் கிடைக்க மனதார வாழ்த்துகிறேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,யாழ். மாவட்டம்.

## சமுகத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகும்



வலி.கிழக்கு பிரதேச பேராவையால் பண்பாட்டுப் விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். எமது கலைகளும், பண்பாட்டு விழுமியங்களும் பேணிப் பாதுகாக்கப்படுவது அவசியமானதாகும். இப்பணியில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள், ஆர்வலர்கள் என்போரது பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும். எமது சமூகமும்,எதிர்கால சந்ததியினரும் இத்துறையில் தமது பங்களிப்பைச் செலுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டியது இவர்களின் தார்மீகக் கடமை எனலாம்.பிரதேச செயலகமும் அதன் பண்பாட்டுப் பேரவையும் ஆர்வலர்களும் ஒழுங்கு செய்துள்ள இந்நிகழ்வானது மிகவும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆ.சிவசுவாமி,
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

## உத்வேகமுள்ள விழா



யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும் பரப்பளவைக் கொண்டுள்ள பிரதேச செயலகம் பண்பாட்டுப் பெருவிழா எடுப்பது போற்றுவதற்குரியது. இப் பெருவிழாவினைக் கண்டு களிப்பதால் சோர்வடைந்த மனங்களுக்கு உத்வேகம் கொடுப்பதாகவும் அமைகின்றது. செயற்திறன் மிக்க பிரதேச செயலரும், அவரது குழுவினரும் பாராட்டுவதற்குரியவர்கள். இப்பெருவிழா சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.




## பிரதேச செயலரின் செய்தி



வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவையின் பண்பாட்டு விழாவும் அதனுடன் இணைந்ததாக மண்ணின் வாசம் பரப்பும் 'செம்புலம்' வெளியீடும் வரவேற்கத்தக்கதும் சிறப்பானதுமாகும். ஏனெனில் ஒவ்வொரு நாடும், அதன் பிரதேசங்களும் வெவ்வேறு இன, மத, பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு பிரதேசத்தினையும் சிறப்பிக்கும் சிறப்புக் கூறுகள் உள்ளன. எனினும் இவை கால ஓட்டத்தில் மருவிவரும் தன்மை காணப்படுவதால் இச் சிறப்புக் கூறுகள் புதிய வடிவம் பெறுவது கண்டுணரக் கூடியதாக இருக்கிறது. இப் பண்பாட்டு விழாவை இக் காலச் சூழலில் பல இடர்பாடுகளிற்கு மத்தியிலும் நடத்துவதற்கும், நூல் வெளியிடுவதற்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த பண்பாட்டுப் பேரவையினருக்கும் ஏனைய அனைவரிற்கும் எனது மனம் நிறைந்த நன்றியறிதலை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சீ.ஏ.மோகன்றாஸ்,
பிரதேச செயலரும் பண்பாட்டு பேரவைத் தலைவரும்.

### வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவை நடத்தும் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

**ஆய்வரங்கு - 2008மொழி –இலக்கியம் - பண்பாடு**

காலம்: 20.07.2008 (ஞாயிற்றுக் கிழமை) ,நேரம்: காலை 9.00 மணிமுதல் 11.30 வரை, இடம்: ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம். தலைமை: சீ.ஏ. மோகன்றாஸ், (தலைவர், பண்பாட்டுப்பேரவை, பிரதேச செயலர், வலி.கிழக்கு), ஆய்வுரை நிகழ்த்துவோர்: யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்.

**மாலை நிகழ்வுகள்:** சுவாமி ஞானப் பிரகாசர் அரங்கு, தலைமை: சீ.ஏ. மோகன்றாஸ் (தலைவர், பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலர், வலி-கிழக்கு), முதன்மை விருந்தினர்: உயர் திரு கே.கணேஷ், (அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்) சிறப்பு விருந்தினர்கள்: வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, (பணிப்பாளர், ஊடக வளங்கள் பயிற்சி மையம், யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி அ.வேதநாயகம் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்), ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி,(அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), கௌரவ விருந்தினர்கள்: கே.ஏ.ஆனந்த ராஜா, (மக்கள் வங்கி வட பிராந்திய முகாமையாளர்), த.கவீந்திரதாஸ், (பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி), சி.நாகேந்திரம், (பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை), த.நடராசா (செயலாளர், வலி. கிழக்கு, பிரதேச சபை). **சிறப்பு நிகழ்வாக 'செம்புலம்' மலர் வெளியீடும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## விழாச்சிறப்புற வாழ்த்துகிறேன்



தமிழர் தம் பண்பாட்டில் எஞ்சியிருப்பவை எவை என்ற கேள்வி எழுகின்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இரு தசாப்தங்களாக நீடித்துவரும் போர்ச்சூழல் ஏற்படுத்திய பாதிப்புகளே இதற்கான முக்கிய காரணியாகும்.

இச் சூழலின் நிலையுணர்ந்து எமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பது காலம் எமக்கிட்டுள்ள கட்டளையாகும்.

இந்த வகையில் வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவை களம் திறந்து செயற்படுகின்றமை கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதில் ஈடுபாடு காட்டும் ஒவ்வொருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். இவ் விழாச் சிறப்புற எனது வாழ்த் துக்களையும், நல்லாசிகளை யும் தெரிவித்துக் கொள் கின்றேன்.

லயன் டாக்டர் வை.தியாகராஜா, (M.J.F, J.P.)
தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்.

## அருளாசிச்செய்தி



வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவை பெருமகிழ்வுடன் நடத்தும் "பண்பாட்டுப் பெருவிழா" நிகழ்வுக்கு வாழ்த்துக் கூறுவதில் யாழ்.மறைமாவட்ட ஆயர் என்ற வகையில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

முடிவின்றி நீண்டு செல்லும் கொடிய போரின் வடுக்களால் திட்டமிட்டு அழித்தொழிக்கப்படும் எமது மக்களின் வாழ்வும், வாழ்விடங்களும், கல்வியும், கலையும், கலாசாரங்களும், பண்பாட்டுப்பழக்கவழக்கங்களும், வழிபாட்டுத் தலங்களும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு அருகிவரும் எமது மக்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கலைகளையும் பழக்க வழக்கங்களையும் பாதுகாத்துவளர்த்து அன்பில் மலரும் நல்லதொரு புதிய சமுதாயத்தை இன, மத, பேதமின்றி எம் மத்தியில் கட்டியெழுப்ப தூர நோக்குடன் செயற்பட்டு உழைக்கும் வலி கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவையினரை மகிழ்வுடன் வாழ்த்தி இறைஆசீர் வேண்டி நிற்கின்றேன்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.ஆயர்.

## ஆக்கபூர்வமான செயற்பாடுகள் வேண்டும்



இலட்சிய வேட்கையும், கொள்கைப் பற்றுறுதியும் கொண்ட மக்கள் கூட்டத்தை உள்ளடக்கிய கோப்பாய் (வலி. கிழக்கு)பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டு விழா தொடர்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இதய பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறோம்.

மனிதனுடைய வாழ்வு பல்வேறு விழுமியங்களைக் கொண்டது. தன் நலம் கருதாது பிறர் நலம் கருதும் சிறந்த வாழ்வியல் மனிதனுக்கே உரியது. தமிழர் தமது வாழ்விடங்களில் இருந்து புலம் பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழும் தற்கால சூழ்நிலை தமிழரது பழைய வாழ்வில் நடைமுறைகளை திரிபுபடுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதனால் வருங்கால தமிழர் தலைமுறை தமிழையும், தமிழர் பண்பாட்டையும் கைவிட்டு பிறநாட்டுப் பண்பாட்டில் புதைந்து கொள்ளும் அபாயம் தென்படுகின்றது. சுயநிர்ணய உரிமையுடைய சுதந்திர புருஷர்களாக வாழவேண்டுமென்ற கொள்கைப் பற்றுறுதி கொண்டுள்ள மக்கள் கூட்டத்தைப் பிரதிபலிக்கும் கோப்பாய் பண்பாட்டுப் பேரவை பழைய வாழ்வியலின் தன்மைகளைத் தமிழர் திரும்பிப் பார்க்கும் வேளையை விரைவில் உருவாக்க ஆக்கபூர்வமான செயற்பாடுகளைத் துரித கதியில் கையாளத் திடசங்கற்பம் பூணவேண்டுமென எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி பேரவையின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இ.த.விக்னராஜா, மேல் நீதிமன்ற நீதிபதி,
யாழ்ப்பாண மாவட்ட நீதிநிர்வாக வலயம்,
வடமாகாணம்.

## அர்த்தமுள்ள விழாவாக அமையட்டும்



பண்பாட்டு மேம்பாட்டிற்கான உணர்வுத்தளத்தினை காத்து உயிர்பூட்டுதலில் பண்பாட்டு விழாக்களின் இடம் குறிப்பிடத்தக்கது.அழகான, நீதியான நாளையினைக் கட்டமைக்கும் காலக் கடமையில் இவ்வாறான பண்பாட்டுப் பெருவிழாக்கள் பெரும் பங்காற்ற முடியும்.

இந்த வகையில் வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை எடுக்கும் பண்பாட்டு விழா அர்த்தமும் அழகும் நிறைந்ததாய் அமைந்திட என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன், துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மக்களின் வளர்ச்சிக்குரிய நிகழ்வு



வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம் நடத்தும் கலை, பண்பாட்டு விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பிராந்திய கலாசார நிகழ்வுகள் நுண்மட்டத்தில் காணப்படும் கலை, பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணர்ந்து அவற்றை வளர்ப்பதற்கும், பிரதேசத்தில் வாழும் கலைத்திறன் மிக்கவர்களை இனங்கண்டு, அவர்களின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளிப்பதற்கும், இனங்காணப்பட்ட கலைஞர்களைக் கௌரவிக்கவும் பெரும் சந்தர்ப்பம் அளிக்கின்றன. இவ்விழா இந்த மக்களின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், தனித்துவத்திற்கும் வழிகோலும் நிகழ்வாக அமைய வாழ்த்துகிறேன்.

வாழ் நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.


## பண்பாட்டுப் பெருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீகண்ணகி**
அச்சகம்
சாங்கானை வீதி,
அச்சுவேலி.

**ராஜன்**
குயிக் போட்டோ
அன் டிஜிற்றல் வீடியோ
பிரதான வீதி, அச்சுவேலி.

**வெண்பனி பதிப்பகம்**
நீர்வேலி.
276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**லைரா தொலைத்தொடர்பகம்**
போட்டோ கொப்பி
Fax- 0214591270
இன்ரநெற் 0602212916
ஈமெயில் - lyranet @ gmail.Com
ஆவரங்கால்.

**கலைவாணி**
கல்வி நிறுவனம்
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.

**தர்சா**
தமிழ்ப் பதிப்பகம்
மத்திய கல்லூரி முன்பாக,
இராச வீதி, அச்சுவேலி.

**சரஸ்வதி விலாஸ்**
சைவ உணவகம்
கோப்பாய் சந்தி,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

**கஜமுகன்**
தொலைத் தொடர்பகம்
கோப்பாய்ச் சந்தி.

(சி/553803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைக்காட்சித் தொடர்களால் ஏற்படும் தாக்கம்

தகவல் தொடர்பாடல் ஊடகங்களில் சக்தி வாய்ந்த ஊடகமாகவும் பாமரமக்களையும் இலகுவில் கவர்ந்து இழுக்கும் ஊடகமாகவும் தொலைக்காட்சி அமைந்துள்ளது. கல்வி அறிவூட்ட வேண்டிய சாதனமானது பொழுதுபோக்கு அம்சங்களை மட்டுமே ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றது. அதிலும் தமிழ்த்தொலைக் காட்சி அலை வரிசைகள் திரைப்படச் சார் நிகழ்வுகளை மீட்டு எடுத்துக் கொண்டிருக்கின்றன. இதன் இன்னொரு வடிவமாகத் தொலைக்காட்சி நெடுந் தொடர்களைக் குறிப்பிடலாம்.

ஆரம்பகாலத்தில் மகாபாரதம், இராமாயணம் தொடர்களாக ஒளிபரப்பாயின. மர்மதேசம், கையளவு மனசு போன்ற தொடர்கள் சமூகம்சார் தொடர்களின் வரிசையில் அதிகரிக்கின்றன.

'கிளிசறின்' நாயகிகளைப் போலியாக அழுவதற்கு பயன்படுத்துகின்றார்கள். இதனைக் கண்டு மக்கள் நிஜமாக அழுகின்றார்கள். பெண்கள் பிரச்சினையை முன்வைப்பது போன்று மாயையை உருவாக்கி, இல்லத்தரசிகளை ஈர்க்கும் முயற்சியில் தொலைக்காட்சி அலை வரிசைகள் ஈடுபடுகின்றன.

வீடுவரும் விருந்தினரை வரவேற்க நேரமில்லை. உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவினை மேம்படுத்த நேரமில்லை. குடும்ப உறவினர்களோடு குதூகலமாக உரையாட நேரமில்லை. ஆன்மீக நோக்கோடு ஆலயம் சென்றவர்கள்கூட குறித்த தொடர் தொடங்குவதற்கு முன் வழிபாடு முடித்து வீடு வந்து சேர்ந்து விடுகின்றார்கள். குடும்ப பெண்கள் மட்டுமல்ல வேலைக்குச் செல்லும் ஆண்கள்கூட வேலை முடித்து வந்தவுடன் குறிப்பிட்ட தொடர்களுக்கு முன்னால் குந்தி விடுகின்றார்கள். பெற்றோர்கள் தாங்கள் நாடகங்களைப் பார்த்துக் கொண்டு, பிள்ளைகளைப் 'படி' என்கிறார்கள். தமது பிள்ளைகளுக்குக் கல்வியில் உதவுவதை அடியோடு மறந்து, தொலைக்காட்சியோடு ஐக்கியமாகி விடுகின்றனர்.

தொலைக்காட்சித் தொடர்கள் பெண்களைக் கேவலப்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. குறித்த ஒவ்வொரு தொடர்களிலும் ஒரு பெண் இரக்கம் அற்றவளாக, பிடிவாதக்காரியாக, அரக்கியாக, கொலைகாரியாகக் காட்டப்படுகின்றாள்.

சித்தி, முகூர்த்தம், கணவருக்காக, அண்ணாமலை, கல்கி, ஆனந்தம், நிம்மதி போன்ற தொடர்களில் இத்தகைய பெண்களைக் காணக்கூடியதாக இருக்கும். இப்பாத்திரங்கள் வரும்போது பயங்கரமான பின்னணி இசையும் ஒளிபரப்பாகும்.

இத்தொடர்களில் இயங்கும் கதாபாத்திரங்கள் சமூக அழிவுக்கு வித்திடுகின்றன. அக்காவை அடுத்தவன் மனைவிக்காகக் கொல்லத் துணிகின்ற தம்பி போன்ற கதாபாத்திரங்கள் தொடர்களில் இடம்பெறுகின்றன. பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் படம் பார்ப்பதற்காகப் பாடசாலைக்குச் செல்லாது பொய்சொல்லல், திருடுதல் போன்ற நிகழ்வுகளில் ஈடுபடுவதாகக் காட்டப்படுகின்றது. இக்காட்சி பிள்ளைகளின் மனதில் பசுமரத்தாணி போல பதிந்துவிடும் அபாயமுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தமிழர் பண்பாட்டினைச் சீரழிப்பதாகவே தொலைக்காட்சி தொடர்கள் காணப்படுகின்றன.

எம்மண்ணிலே புகுந்த இப் புற்று நோய் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

சின்னத்திரை சிதைக்கப்பட வேண்டும்.

தொலைக் காட்சித் தொடர்களிலிருந்து மீட்சி பெற வேண்டும்.

**"மாணவர்களாகிய நாம் விழித்தெழுவோம்"**

**பா.துஷாளினி 10 A,**
**யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

## கல்வியே விடுதலைக்கு வழி

விடுதலை பெற்றிட வேண்டுமெனில்
விரும்பியே பெறவேண்டும் கல்வியினை – உரிமை
தந்நலத்தை தவிர்த்திட வேண்டுமெனில்
தருவிக்க வேண்டும் கல்வியினை

கற்றவர் சொல்லும் கருத்துக்கு
காலமெல்லாம் கிடைத்திடுமே மரியாதை – நம்மைப்
பெற்றவர் இதைக்கண்டு அறிந்ததாலே
பெரும்பள்ளி அனுப்புகிறார் பிள்ளைகளை

பெண் கல்வி வேண்டுமென்றார் பாரதியார் – வெறும்
பேதைகளல்ல பெண்களென்றார்
கண்ணான கல்வியினைக் கற்றிடுவோம்
காலம் முழுதும் புகழ் பெற்றிடுவோம்

உண்மையை உணர்த்தும் கல்வியினை
ஊரெல்லாம் கற்றுக் கொடுத்திடுவோம் – நற்
பண்பினைப் பழக்கிடும் கல்வியினை
பிறர்க்கெல்லாம் பரப்பி மகிழ்ந்திடுவோம்.

சே.பனிசங்கர், தரம் - 11
நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

## சீனப் பொன் மொழிகள்



- நீர் கப்பலைத் தாங்கும். அதுவே கப்பலைக் கவிழ்க்கவும் செய்யும்.
- சேற்றில் ஓரடி வைப்பதை விட, பத்தடி சுற்றிச் செல்வது மேலானது.
- வீட்டுக்குள்ளே வண்டி செய்யலாம். ஆனால் அதை வீதியிலேதான் ஓட்ட வேண்டும்.
- பணத்தைக் காட்டினால் குருடர்களும் கண்ணைத் திறந்து விடுவார்கள்.
- உன்னிடம் பணமிருந்தால், நீ சொல்வதெல்லாம் வேத உண்மை.
- மனிதர்கள் நேசமாயிருக்கும் இடத்தில் தண்ணீர் கூட இனிப்பாயிருக்கும்.
- சோகம் என்ற பறவைகள் உன் தலைமேல் பறப்பதைத் தடுக்க முடியாது. ஆனால் அவை உன் தலையிலே கூடு கட்டி வசிப்பதைத் தடுக்க உன்னால் முடியும்.
- ஒரே காலால் இரண்டு தோணிகளில் நிற்க முடியாது.
- பூனையும் எலியும் சேர்ந்து தூங்கினால், மரணம் கண்முன் நிற்கின்றது.

**தே.கபில்தேவ் - தரம் 9**
யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.




## விடுகதை சொல்லப்போறேம்...

1. எட்டடி உயரத்தில் தொட்டில். அது என்ன?
2. வெளியே வெள்ளி உள்ளே தங்கம். அது என்ன?
3. பந்தலிலே பச்சைப்பாம்பு. பக்கத்திலே போகலாம் பயமில்லை! அது என்ன?
4. சின்னதாயிருக்கும் சித்திரக்கோபுரம்; கொத்தரோ, தச்சரோ கட்டாத கோபுரம். அது என்ன?
5. ஆடும்போது ஆளை அசத்தும், பாம்பைக் கண்டால் பாய்ந்து துரத்தும். அது என்ன?
6. சொன்னதைத் திருப்பிச் சொல்வான். கிளிப்பிள்ளை அல்ல! அவன் யார்?
7. எட்டிப் பார்த்தால் முகம் தெரியும். எடுத்துக் குடித்தால் தாகம் தீரும். அது என்ன?
8. எட்டத் தெரிவான். ஆனால் எட்டாத உயரம்! அவன் யார்?
9. ஒரு கிணற்றில் ஒரே தவளை. அது என்ன?
10. ஆளில்லாத வீட்டில் இவன்தான் கண்ணில் படுவான். அவன் யார்?

**விடைகள்**

1. குருவிக்கூடு. 2. முட்டை. 3. புடலங்காய். 4. புற்று. 5.மயில். 6. எதிரொலி. 7. கிணற்றுத் தண்ணீர். 8. வானம். 9. நாக்கு. 10. பூட்டு.

## என்னோடு

கவிஞனின் கையில் வார்த்தையைப் போல
சிற்பியின் கையில் உளியைப் போல
ஓவியனின் கையில் வர்ணத்தைப் போல
சிப்பியின் நடுவில் முத்தைப் போல
பாடகனின் கையில் இசையைப் போல
செடியின் நடுவில் மலரைப் போல
என்னோடு என் அம்மா!

சாகரி சத்தியபாலன், தரம் 9 B
யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## பரிசு



ஓர் ஊரிலே ஒரு புலவர் இருந்தார். செல்வமும் செல்வாக்குமாய் இருந்த அவர் ஒருமுறை வறுமைக்கு ஆளானார். தம் வறுமையை எவ்வாறு போக்குவது என்று அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். வழி ஒன்றும் தெரியவில்லை.

அப்போது அவருடைய மாணாக்கன் ஒருவன் அங்கே வந்தான். அவருடைய துன்பத்தைக் கேட்டறிந்து அவன் மிகவும் வருந்தினான்.

"ஐயா! பத்துக்கல் தொலைவில் பாற்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு வள்ளல் இருக்கிறார். அவரிடம் போய்ச் சென்று தாங்கள் பாடல்களைப் பாடிக் காட்டினால், அவர் உங்களைப் பாராட்டி மகிழ்ந்து அவர் பரிசு கொடுப்பார்" என்றான் அந்த மாணாக்கன்.

புலவர் தம் மாணாக்கனுக்கு நன்றி கூறிவிட்டு, அன்றே பாற்குளத்திற்குப் புறப்பட்டார். பாற்குளம் என்பது ஒரு சிறிய ஊர். அங்கு போய்ச் சேர்ந்த புலவர், எங்கும் குடிசைகளே இருக்கக் கண்டார். இரண்டே இரண்டு பெரிய மாளிகைகள் அங்கு காணப்பட்டன.

எந்த மாளிகை வள்ளலின் மாளிகை என்று புலவருக்குத் தெரியவில்லை. வள்ளலின் பெயர் என்ன என்று




அந்த மாணக்கனும் சொல்லவில்லை. அவரும் கேட்டுக் கொள்ளவில்லை. அந்த ஊரில் உள்ள யாரையாவது கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றால் அதற்குப் புலவரின் நாண உணர்ச்சி இடம் கொடுக்கவில்லை. சம்பந்தமில்லாதவர்களிடம் தான் இரவலனாக வந்து நிற்பதைக் கூறிக்கொள்ள அவரின் மான உணர்ச்சி மறுத்தது.

முதலில் தெரிந்த மாளிகைக்குள் புலவர் நுழைந்தார். வீட்டுக்கு உரியவர் அப்போது தம் உறவினர் சிலருடன் சிரித்துப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். 'நல்ல வேளையில்தான் வந்தோம்' என்று புலவர் எண்ணிக் கொண்டார். "ஐயா! நான் ஒரு புலவர்" என்று தொடங்கு முன்னரே வீட்டுக்காரனின் சிரிப்பு மறைந்தது. "போ வெளியே!" என்று கடுகடுத்துப் பேசி அவரை விரட்டி விட்டான்.

அடுத்த மாளிகையை நோக்கிச் சென்றார் புலவர். மாளிகை வாசலை நெருங்கும்போதே உள்ளேயிருந்து கடுஞ்சொற்கள் கேட்டன. யாரோ வேலைக்காரன் செய்த தவறினைக் கண்டித்து மாளிகைக்காரர் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தார். 'தாம் புறப்பட்ட நேரம் சரியில்லை' என்று திரும்ப எண்ணினார் புலவர். வந்து வீணே திரும்புவதா என்ற ஓர் எண்ணம் புலவருக்கு எழுந்தது.

மாளிகையினுள் சென்றார். 'யார்?' என்ற கடுமையான குரலைக்கேட்டு, "நான் ஒரு புலவர்" என்று மென்று விழுங்கிக் கொண்டு பதில் கூறினார் புலவர்.

அவ்வளவில் அவரின் முகத்தில் புன்னகை விரிந்தது. இனிய குரலில் புலவரை வரவேற்று உபசரித்து அவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். இனிய பாடல்களைக் கேட்டு இரங்கிப் பெரும் பரிசு கொடுத்தனுப்பினார் அந்த வள்ளல்.

## நீங்களும் எழுதலாம்

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமா கும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய
# முதல்வர் திரு. தம்பு கந்தையா அவர்களின்
# மணிவிழாச் சிறப்பு மலர் – 20.07.2008

## மனிதநேயம் மிக்கவர்

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய முதல்வர் தம்பு கந்தையா அவர்களின் மணிவிழா நிகழ்விற்கு ஆசியுரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அவர்



ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகக் கடமை யாற்றி தமது பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

அவர் ஓய்வு பெற்றாலும் கல்விச்சமூகத் திற்குத் தம்மாலான உதவிகளைச் செய்வதற்கு சுகதேகியாகவும், திட ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்கு எல்லாம் வல்ல அம்மை அப்பன் நல்லாசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ இ.குமாரசாமிக்குருக்கள்,
பிரதமகுரு, சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்,வரணி.

## அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர்

மணிவிழா மங்கலம் காணும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய முதல்வர் தம்பு கந்தையா அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லும் இந்த வேளை பெறுமதியானது.



படிப்படியாக வாழ்வில் முன்னேறிய எங்கள் மணிவிழா நாயகர் பல மாணவர்களின் உயர்வுக்கான படிக்கல்லாய் விளங்கினார்.

அர்ப்பணிப்பான ஆசிரியத்துவத்திற்கு இலக்கணமான அவர் வாழ்வு எல்லோருக்கும் முன்மாதிரியானது.

அவர் குடும்பவாழ்விலும் சமூகவாழ்விலும் நல்லன எல்லாம் நிறைந்திட எனது அன்பு வாழ்த்துகள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்,
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தூரநோக்குடையவர்

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபல் தம்பு கந்தையா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரைக் கற்பிக்கச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததைப் பேறாகக் கருதுகின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை என்னுடன் தொடர்புடையவராக இருந்து வரு கின்றார்.

தம்பு கந்தையா அவர்கள் 1973 இல் எழுதுவினைஞராகத் தொழிலை ஆரம்பித்துப் பின்னர் ஆசிரியராக இணைந்து பிரதி அதிபராகி, அதிபராகி 35 வருட சேவையின் பின்னர் வயது அடிப்படையில் தனது பதவியை நிறைவு செய்கிறார்.

சிறந்த பல பண்புகள் கொண்ட திரு தம்பு கந்தையா அவர்கள் மேலும் பல்துறைகளில் சிறப்புற்று விளங்கவேண்டும். அவர் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ இறைவன் அருள் கிட்டவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தேச அபிமானி

அதிபர் தம்பு கந்தையா அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



1980 களில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தொண்டராசிரியராக இணைந்து கொண்ட கந்தையா கல்வியில் கொண்ட ஈடுபாட்டாலும், கடினமுயற்சியாலும் படிப்படியாக உயர்ந்து 1986 இல் இப்பாடசாலையிலே முழுநேர ஆசிரியராகப் பதவியேற்றார். அவர் ஆசிரியராகவும், 1988 இல் பிரதி அதிபராகவும், ஓய்வுபெறும்வரை இப் பாடசாலையின் அதிபராகவும் பதவி வகித்த காலத்தைப் பின்நோக்கிப் பார்த்தால், இப் பாடசாலையின் கல்வித்தரத்தில் மாணவ ஒழுக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அவரது அர்ப்பணிப்பு நிறைந்த பணிகளும் முக்கிய காரணம் என்பதில் மாறுபட்ட கருத்திருப்பதாகத் தெரியவில்லை. அவர் கடமையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது அனுபவம், ஆற்றல், வழிகாட்டல்கள் இப் பாடசாலைக்கு மட்டுமல்லாது எமது பிரதேசத்திற்கும் எம்மக்களுக்கும் தேவை. அவரது பணிகள் தடையின்றித் தொடர அவரும் அவர் குடும்பமும் எவ் வித நோய்நொடியுமின்றி சகல வளங்களுடன் என்றும் வாழ இறை வனைப் பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர் க.கந்தசாமி,
பீடாதிபதி, பட்டப்பின் படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கல்வித் தொண்டாற்றிய செம்மல்



சவால்கள் பலவற்றை எதிர்கொண்டு வெற்றிகண்ட அதிபர்களில் தம்பு கந்தையா அவர்களும் சிறப்பானவராக மிளிர்கின்றார். தொடர்ச்சியான பல இடப்பெயர்வுகளிலும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் கட்டுக்கோப்பினைக் குலையாது பேணி, அதன் கல்வித்தரத்தை மேம்படுத்திக் கல்வித் தொண்டாற்றியவர் அதிபர் தம்பு கந்தையா அவர்கள்.

இவ்வித்தியாலயத்தில் இரண்டு தசாப்தங்களாக ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகக் கடமையாற்றிய செம்மல் அதிபர் த.கந்தையா அவர்கள், தனது மணிவிழாவினைச் சிறப்பாக மகிழ்வுடன் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் கல்விக்குத் தொண்டாற்ற எனது பிரார்த்தனைகள்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்.

## உள்ளத்தால் உயர்ந்தவர்

மணிவிழாக் காணும் எமது அதிபர் தம்பு கந்தையா அவர்கள் உருவத்தால் மட்டுமன்றி உள்ளத்தாலும் உயர்ந்தவர்.

எல்லாக் காலங்களிலும் பெற்றோருடன் நல்லுறவுகளை வைத்திருந்தவர். பல நலன் விரும்பிகளைப் பாடசாலை அபிவிருத்திக்கு உள்வாங்கியவர்.

கொடிகாமம் நகர்ப்புற வணிகர்களுடன் மகத்தான உறவினைப்பேணி ஆண்டுதோறும் பாடசாலைக்குப் பல நன்மைகளையும் பெற்றுக் கொடுத்தவர்.

எல்லாச் சிறப்புகளோடும் நிறைந்த ஆரோக்கியத்துடனும் நீடுழி வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சபை,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.



## முதல்வரின் வாழ்க்கைப் பதிவுகள்

01. பிறப்பு: 22.07.1948
02. பாடசாலைக் கல்வி: ★ யா/ அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
    ★ யா/ கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
    ★ யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி
03. உயர்கல்வி: ★ பொதுக்கலைப்பட்டதாரி B.A (Cey) பேராதனைப் பல்கலைக்கழகம்.
    ★ கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா (Dip.in.Education) தேசிய கல்வி நிறுவகம்
    ★ அதிபர் தரம் – I (SLPS - I)
04. சேவை
    ★ எழுதுவினைஞர், விற்பனைத்திணைக்கள தலைமைக்காரியாலயம் 01.08.1973 – 30.04.1974
    ★ விவசாயி
    ★ தொண்டராசிரியர் – யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். 01.05.1980 - 04.10.1982
    ★ ஆசிரியர் - நு/ஹோலி றோசரி வித்தியாலயம், பொகவந்தலாவ 05.10.1982 - 17.05.1986
    ★ ஆசிரியர் – கிளி/கிளாலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 18.05.1986 - 06.07.1986
    ★ ஆசிரியர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 07.07.1986 - 28.02.1988
    ★ பிரதி அதிபர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 01.03.1988 - 21.04.1992
    ★ அதிபர் – யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் 22.04.1992 - 21.07.2008

## ஆளுமை நிறைந்தவர்



அதிபர் என்றால் அவர் தம்பு கந்தையா. இவ்வாறுதான் கொடிகாமம் கிராமத்தைப் பொறுத்தவரை நிலைமை. இடம்பெயர்ந்து மீளக்குடியமர்வதென்றாலும், ஊர்மக்கள் முதலில் விசாரிப் பது கந்தையா தனது வீட்டுக்கு மீண்டும் வந்து விட்டாரா என்பது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் - ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் அக்குவேறு ஆணி வேறாக நன்கு அறிந்தவர்.

கொடிகாம மக்கள் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்தவர். ஒவ்வொரு மாணவரையும் இயலுமை இயலாமைக் கேற்ப, உயர் கல்விக்கு வழிகாட்டுபவர்.

அவ்வாறாக ஆளுமையும், ஆற்றலும், அறிவும், அர்ப்பணிப்பும்மிக்க, அதிபர் த.கந்தையா அவர்கள் அறுபதாம் அகவை கண்டு மணிவிழாக் காண்பதையிட்டு, அவர் சகல வளங்களும் பெற்றுப் பேர்புகழுடன் பல்லாண்டுவாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

கு.பிரேமகாந்தன், வலயக் கல்விப்பணிப்பாளர்,தென்மராட்சி.

## தன்னம்பிக்கைமிக்க ஒரு தலைவர்

மணிவிழாநாயகர் தம்பு கந்தையா அவர்கள் தன்னம்பிக்கை மிக்க ஒரு தலைவர். தார்மீகப்பண்புகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளவர்.



எத்தகைய இடர்வரினும் தனது கடமையை ஆற்றுவதில் கண்ணியம் தவறாதவர். தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்ட இவரது முகாமையால் எமது பாடசாலை இன்று மேலோங்கி நிற்கின்றது.

எதிர்காலத்தில் தரம் - 1 AB பாடசாலையாக மிளிர வேண்டும் என்ற அவரது கனவை பாடசாலை சமூகத்தினர் நனவாக்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. வயதெல்லை அவர் சேவைக்கு வேலிபோட்டாலும் ஓய்வு பெற்ற பின்பும் இப்பாடசாலை மீதான கரிசனை இருக்கும்.

ஓய்வு பெறும் எங்கள் முதல்வர் ஆரோக்கியத்துடன் நல்வாழ்வு வாழ இறைவன் அருள்புரிவாராக.

திருமதி செ.ஜெகநாதன்,
பிரதி அதிபர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

## காலத்தை வென்ற காவலன்

கண்ணை இமைகாப்பதுபோல் கருத்துடனே கண்ணியமாய் கல்விசார், கல்விசாரா அனைத்துப் பணி களையும் அர்ப்பணிப்புடன்



செயற்படுத்தி தென் மராட்சிப்பதியில் தலைதூக்கும் பாடசாலை களில் ஒன்றாக எம் திருநாவுக்கரசு மகாவித்தி யாலயத்தை நீடுபுகழ் ஆக்கி வைத்த பெருந்தகை, பள்ளி முதல்வர் உயர்திரு தம்பு கந்தையா அவர்களை மணிவிழா நாளில் வாழ்த்துவதில் நாம் பூரிப்படைகின்றோம்.

கொடிகாமத்தில் உள்ள காத்திரமான ஒரே ஒரு சொத்து எமது பாடசாலையாகும். இதனை இரு தசாப்தத்திற்கு மேலாகத் தனது சொந்த மனை போல் நிர்வகித்து வெற்றி கண்டவர். பாட சாலை அயற்காணியை வாங்குவதற்கும், புதுப்பொலிவுடன்மண்டபங்கள்பலஎழுவதற்கும்அயராதுஉழைத்தவர்.

நவீன வகுப்பறைகளை அமைத்து பாடவிதானத்துடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி பல்வேறு போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றி தேசிய மட்டம் வரை சென்று வெற்றியீட்ட வழிகாட்டியவர்.

மணிவிழா நாயகரும் அவர் குடும்பத்தாரும் தம் ஓய்வு காலத்தில் எல்லா நலன்களும் பெற்று இனிதே நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

[illegible]கேஸ்வரன்,
செயலாளர், பழையமாணவர் சங்கம், கோடிகாமம் திருநாவுக்கரசு ம.வி

## அருளாசிச் செய்தி



தென்மராட்சி கிழக்கின் கல்விப் புல மதில் பெருவிருட்சமாய் வியாபித்து நிற்கும் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் திரு.தம்பு கந்தையா அவர்கள் மணி விழாக்காணும் இத் தருணத்தில் பெருமகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

இந்து மாணவர்களுடன் பெருமளவு கத்தோலிக்க மாண வர்களையும் கொண்டுள்ள இவ்வித்தியாலயத்தில் ஆசிரிய ஒற்றுமை, மாணவர்களின் கட்டுக்கோப்பு என்பன மிளிரும் வகையில் செயற்படுத்திய அதிபரின் ஆளுமை போற்றுதற்குரியது. மேலும், அதிபர் அவர்கள், கல்வி, சமூகப் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்ற, உடல் உள நலன்கள் பெற்று வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

உதவிப் பங்குத்தந்தை
அருட்பணி ம.வி.தயாகரன் (மிருசுவில் பங்கு)

## சிறந்த முகாமையாளர்

"கற்றாங்கு ஒழுகுக" என்ற மகுடவாசகத்திற்கு ஏற்ப மாணவர்களை வழிநடத்திச் செல்வதில் அதிபர் தம்பு கந்தையா அவர்கள் ஆற்றியபணி போற்றுதற்குரியது.



கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் அடித்தளமாகக் கொண்டு மேற்படி பாடசாலையில் இருபது வருடங்களுக்கு மேலாக ஆற்றிய சேவையால் தென்மராட்சி வலயமே பெருமிதமடைகின்றது.

இவரது ஓய்வுகாலம் தென்மராட்சி வலயத்தின் கல்வி விருத்திக்கு வழிசெய்யும் வகையில் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றினூடாக தொடர பாடசாலைச்சமூகம் அக்கறை எடுத்துக் கொள்வது ஏற்புடையதாகும்.

மணிவிழாநாயகன் என்றென்றும் அவர்தம் குடும்பத்தினருடன் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ என் உளமார்ந்த வாழ்த்துகள்.

க.கணேஷ், அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

## கடமையுணர்வு மிக்கவர்

அன்பர் தம்பு கந்தையா அவர்கள் மணிவிழாவைக் கொண்டாடுவதனை அறிந்து உவகையுறுகின்றேன். அறுபது ஆண்டுகள்



என்பது மிகவும் பரந்தது- கிடைத்தற்கு அரியது- பெறுவதற்கரிய பேறாகும். கந் தையா அறுபது வருடங்கள் விக்கினங்கள் இன்றி வாழ்ந்து சமூகப்பணியாற்றி குடும்ப சாகரத்தில் ஊறித் திளைத்து உயர்வடைந்துள்ளார். அவர் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் அரச சேவையில் பணியாற்றுகின்றார். அதுவும் ஆசிரியப்பணி, அதிபர் சேவை எனப் பலமுகங்களைக் கொண்டு அவரால் ஆற்றப்பட்ட சேவைகள் தற்போது நினைவு கொள்ளப்படுகின்றன.

அன்பர் கந்தையா தம்பிறப்பிடத்திலேயே அமைந்துள்ள பாடசாலையில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் அதிபராகவும் பணியாற்றக்கிடைத்தமை அவரது பிறவிப்பயன் என நான் கருதுகிறேன்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் கொடிகாமம் நகரப்பகுதியிலுள்ள புகழ் பூத்த பாடசாலையாகும். கால, சூழல் மாற்றங்களுக்கேற்ப அப்பாடசாலையும் பற்பல இடர்களைச் சந்தித்துள்ளது. இந்த நிலையிலும் குறித்த பாடசாலையை ஓர் அமைப்பாகக் கட்டிக்காத்துவந்தமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

அதிபர் தம்பு கந்தையா தமது பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் தம் மண்ணிற்கும் மக்களுக்கும் சிறந்த பணியாற்ற வேண்டும். அவரது ஓய்வுகாலம் ஆரோக்கியமானதாகவும் மனைவி மக்களுடன் இன்பமானதாகவும் இருக்க வாழ்த்தி இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

அன்னலிங்கம் பிறேமசங்கர்,
மாவட்ட நீதிபதி, சாவகச்சேரி.

## செயல்வீரர்

கல்விப் பணியில் இருபத்தாறு ஆண்டுகள் அயராது பணியாற்றி தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்று மணி விழாக்காணும் அதிபர் தம்பு கந்தையா அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த அதிபர்களில் மணிமுடிபோல் விளங்கியவர் தம்பு கந்தையா. இவ்வித்தியாலயத்தில் பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும் மாணவர்களுடைய கல்விச் செயற்பாடுகளிலும் அவர்களது முழுமையான ஆளுமைவளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதிலும் சிறந்து விளங்கியவர்.

மாவட்டமட்ட, மாகாணமட்ட, தேசியரீதியில் இவ்வித்தியாலய மாணவர் பெற்ற அடைவுகள் அதிபரின் சேவைக்குக் கிடைத்த வெகுமதிகளே.

இவரது கல்விச் சமூகப்பணிகள் என்றும் தொடரவும் அதன் மூலம் சமூகம் பயன்பெறவும் அதற்கேற்ப உடல் உள நலன்களை இவர் பெற்று வாழவும் இறை அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

வி.இராசையா, மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

## சிறந்த வழிகாட்டி

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த முதல்வர் தம்பு கந்தையா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பேருவகை யடைகின்றேன்.



1982 ஆம் ஆண்டு ஆசிரியப்பணியை ஆரம்பித்து 1986 இல் யாழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக் கடமையேற்று பிரதி அதிபராக, அதிபராகத் தன்னை உயர்த்திக் கொண்டதுடன் பாடசாலையையும் உயர்த்திய பெருமைக்குரியவர்.

பாடசாலைக்குப் பல்வேறு மூலங்களிலிருந்தும் நிதிகளைப் பெற்று பௌதீக வளவிருத்தியில் இன்றைய நிலையைப் பாடசாலை எய்துவதற்குக் காரணமாக இருந்தவர் தம்பு கந்தையா அவர்களே. கல்வியுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் மேம்பட்டிருப்பது பாராட்டக்கூடியது. தம்பு கந்தையா அவர்களின் மணிவிழா சிறப்புற வாழ்த்து வதுடன் அவர் இளைப்பாறினாலும் தொடர்ந்து நல்வாழ்வு வாழ இறையருள் துணைநிற்பதாக.

எஸ்.கே.யோகநாதன்,
பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

பாடசாலைச் சமூகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"முனியப்பதாசன்" என்ற இளம் எழுத்தாளர் குறுகிய காலத்தில் அதிக சிறுகதைகளைப் படைத்தவர். அதேபோன்று தமது இளம் வயதிலேயே இவ்வுலகை நீத்தவர். 1964 இல் "கலைச்செல்வி"யில் எழுதத் தொடங்கிய அவர் மூன்று வருடங்களில் காத்திரமான, தனித்துவமான இருபது சிறுகதைகளை எழுதினார்.

அவரது கதைகள் தனித்துவமானவை. ஏனைய எழுத்தாளர்களின் படைப்புகளைவிட பெரிதும் வித்தியாசமான, அற்புதமான கருப்பொருள்களைக் கொண்டவை. அவர் ஆன்மீகத்தைத் தேடலாகக் கொண்டவர். அவரது எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் வித்தியாசமில்லை என்பது இன்னொரு பரிமாணம்.

அந்த ஆற்றல் மிகுந்த இளம் படைப்பாளி தான் மரணிப்பதற்கு முன்னர் தன்வசம் இருந்த சிறுகதைகளை எரித்து விட்டார் என்பது கவலைக்குரியதாகும்.

திறமை மிகுந்த அந்த எழுத்தாளனின் இருபது கதைகளை இலக்கிய உலகுக்கு அளித்த பெருமை பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானுக்கே உரியது. அவற்றைத் தேடிப் பிடித்து ஆவணமாக்குவதற்குத் தமக்கு 6 வருடங்கள் சென்றதாகக் கூறுகின்றார் அவர்.

முனியப்பதாசனின் கதைகளை அச்சுப்படுத்தி பெரும்பணியை ஆற்றியவர் "மல்லிகை" டொமனிக் ஜீவா ஆவார்.

முனியப்பதாசனின் கதைகளால் கவரப்பட்ட "ஈழநாடு" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே.பி.ஹரன் ஐயா, அவற்றில் ஒன்றைச் சென்னைக்குச் சென்றபோது ஆனந்தவிகடனுக்குக் கையளித்திருந்தார். அக்கதை ஆனந்த விகடனின் முத்திரைக் கதையாக வெளிவந்திருந்தது.

"நிமிடப் பூக்கள்" முனியப்பதாசனின் மிகச் சிறந்த சிறுகதையில் ஒன்று. அதனை எங்கள் மனம் நெகிழ்ந்த அஞ்சலியுடன் இவ்வாரம் 'உதயன்' ஞாயிறு இதழில் மறுபிரசுரம் செய்கிறோம்.

- ஆசிரியர்.




பெண்ணே, உன் முகத்தில் காவியங்களின் அழகுகளைக் காணுகின்றேன். உன் விழிக்கோணத்தில் நிலவு வழியும் அழகினை உணருகிறேன். நிலத்தைப் பிளந்து புறப்படும் பயிரின் முனையில் துள்ளும் உயிரின் பொலிவு போன்ற உன் பொலிவில் ஆட்படுகிறேன். அழகுகள் உன்னில் இருந்தும் பிறந்து உன் னிலேயே சங்கமமாகிவிடுகிற விந்தையில் என்னை இழந்து கொண்டிருக்கிறேன். ஓவியனின் நினைவோடே ஒட்டி ஒட்டி தூரிகை சிதறும் நிறங்களின் அழகு போல உன்னை நினைக்க நினைக்க என் மனமாகிய தூரிகை அழகுகளைத் தூற்றுகிறது.

நெஞ்சில் மூட்டிய 'தீ' அவிந்து விட்டதா? நான் பைத்தியக்காரன் ஆகிவிட்டேனோ, பார்த்த சாரதி கோயிலில் போய் ஏழைகளை உயர்த்துவதே உங்கள் விரதமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று விவேகானந்தர் யுவர்களுக்குக் கட்டளையிட்டாரே? அந்தக் கட்டளையை நெஞ்சில் அந்தரங்கமான காதல் நினைவைப்போல் போற்றிப்போற்றி நான் மகிழவில்லையா? இந்த நாட்டின் துடிப்புள்ள இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டிவிட வேண்டுமென்று கனவுகண்டு கொண்டிருந்தேனே.....

எனது படிப்பறையில் மாட்டப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்தைப் பார்த்தேன். என்னால் பார்க்கவே முடியவில்லை. கண்கள் சோர்ந்து சோர்ந்து தள்ளாடின. மதுவுண்ட கண்கள் எங்கும் நிலைகொள்ளாமல் நடுங்கிச் சோருகிறாற் போலத்தான் வாழ்வில் சலனங்கள்தாம் எத்தனை - என்வரையில்! அந்தச் சலனங்களில் எல்லாம் தப்பித்தப்பி ஆடிப்போய் விடாமல் கம்பீரமான அருளொளி கொழிக்கிற அற்புத மான விவேகானந்தரின் கண்களை நினைத்து நினைத்துத் தப்பி வந்தேனே? இப்போது மட்டும்..... பெண் ஒருத்திக்காய் நெகிழ்ந்து போய்க் கடிதம் எழுத ஆரம்பிப்பது என்று ஆகிவிடுமாப்போல் இருக்கிறது.

எழுதிய கடிதமும் தாளும் படபடவென்று நடுங்கின. துணிந்து இமை வெட்டாமல் அந்தக் கண்களைப் பார்த்தேன். அவரது கண்களின் வெண் விழிப்பரப்பில் ஒரு சமயம் என் கண் களில் இருந்தும் வீறிட்டுப் பெருகிய நீரும் கலந்தாற்போல் இருந்தது.

மனம் அந்தச் சம்பவத்தை அவர் கண்களின் வழியாற் பார்க்கிறாற் போலத்தான் தோன்றிற்று.

வருடாந்த மகோற்சவ நாள்களின் பின்னர் கந்தசுவாமி கோயில் மங்கத் தொடங்கி விட்டி ருந்தது. ஆனால், அன்றைக்கு கையிலாய வாகனத் திருவிழா.

அன்று வீதியே கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது. பெருகி நிற்கிற ஜனத்திரளில் தெய்வமே அஞ்சிச் சோருகிறாற் போலப்பட்டது. கந்தசுவாமி கோயிலுக்குப் போகிற வழக்கமே எனக்குக் கிடையாது. உருண்டு கல்லும் முள்ளும் கீறக்கீற நாயனார் ஒருவர் போனாற் போல ஜனத்திரளில் ஏறியும் இறங்கியும் அந்தரத்திலும் போக யாரால் இலகுவில் முடிந்து விடுகிறது. நண்பன் அந்தத் திருவிழாவைப் பார்ப்பதற்காகக் கொழும்பில் இருந்து வந்திருந்தான். அவனோடு இழுபட்டுப் போய்விட்டேன். அவனைக் கோயிலின் உட்பிரகாரத்துள் பக்திரஸம் சொட்ட நிற்க விட்டு விட்டு, நான் அப்பால் நகர்ந்து தீர்த்தக் குண்டுப் படிக்கட்டில் காலைத் தண்ணீருக்குள் தோய்த்து அளைந்த படியே விரிவானத்தைப் பார்த்திருந்தேன்.

தீர்த்தக் கேணியின் மேல் விதானத்தையும் மீறித் தென்னமரங்களின் முடிகள் மட்டுமே தெரிந்தன. அந்தரத்தில் கருநீலம் போர்த்த பசுமை பளீரென்று பிரகாசிக்கும் வெண்ணி லவில் குளிர்ச்சியாய் நின்றது. வெண் பொட்டுக்களைப் பதித்திருக்கும் திமிரில் அங்கும் இங்குமாய் விரிவான் ஒளிகூட்டி நகைத்தது. இத்தனை ஆயிரம் ஜனத்திரளின் மத்தியில் இருந்தும் நல்லூர்க் கந்தன் அஞ்சி நடுங்கி விரிவானின் ஒளிப்பொட்டில் நின்றும் சுற்றி நிற்கிற ஜனத்திரளைப் பரிகாசமாய்ப் பார்த்துக் கண்சிமிட்டுகிறாற் போலப் பிரமை உணர்வு. பார்த்தபடி இருந்தேன்.

சிரிப்பொலி எழுந்தது. என்னைச் சுண்டிற்று.

உயிர்ப்பூ ஒன்று மெல்லென நடந்து வந்து கீழ்ப்படியில் எனக்கு வெகுசமீபமாய் நின்றது. அவள் கூசாமல் வெட்கப்படாமல், நாணமேயில்லாமல் என்னையும் விரிவானையும் மீண்டும் மீண்டும் மாறிமாறி பார்த்துச் சிரித்தாள். திருவிழாக் காலங்களில் முருகன் தன் தினைப்புனத்து லீலைகளை இளசுகள் மேலே ஏற்றி நாடகம் ஆடிவிடுவதாய் கேள்விப்பட்டிருக்கிறேன். 'இது ஒரு பைத்தியம்' என்று எண்ணியபடியே நான் என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

நீரில் சலசலப்புப் பிறந்தது. திரும்பிப் பார்த்தேன். சேலைக்கரையைச் சற்றே கால் மேல் மிதித்தபடியே காலை நீரில் விட்டு நீரைக் குமிழி கக்கச் செய்தபடியிருந்தாள். அந்தச் சூழ்நிலையில் ஒரு மகாகாவியத்தின் நளினங்களைச் சுமந்தபடி நிற்கிறாற் போலத்தான் அவள் தோன்றினாள். இளம் சிவப்பும் மரநிறமும் கலந்த சேலையும் அதற்கேற்றாற் போன்ற மேற்சட்டையும் அவளுக்கு மிக்க எடுப்பாய் இருந்தது. கவலை இல்லாமல் அலாதி ஆணவத்தோடு தானே அவ்விடத்தின் அரசி போலத் தட்டத்தை ஏந்தியிருந்த அழகு என்னுள் விர்ரென்று ஏறுமாப்போல இருந்தது. கலைஞனின் மனம்தான் எவ்வளவு கோமாளித்தனமாய் ஆகிவிட்டிருக்கிறது. ஆஸ்கார் ஒயில்ட், பைரன் முதலான கலைஞர்கள் நெறி பிறழ்ந்து - நெறி பிறழ்ந்து அழகுக்கு ஆட்பட்டு - ஆட்பட் டுப் போய்ச் சீரழிந்த தற்கு அவர்களின் 'புனித வழிபாடற்ற தன்மை'யே காரண மாயிற்று என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பாரதி முதலான கவிகள் அழகைப் போற்றியிருந்தா லும் சீரழியாமல் இருந் ததற்கு அந்தப் புனித வழிபாட்டுத் தன்மையே காரணமாயிற்றோ என்னவோ? நெஞ்சில் எது எதுவோ சிந்தனைகள் பற்றிப் படர நான் அவளைப் பார்த்தேன். அவளது அற்புதமான அழகை இந்த உலகத்தின் சகல பரிசுத்தங்களின் மேலும் ஏற்றிப் பார்க்க முயன்றேன். நெஞ்சில் ஏறிய சலனம் தீருகிறதாக இல்லை. என் நுட்பமான அழகு ரசனைப் புலன்களில் அவள் இடம் பிடிக்கலானாள்.

* * *

அவளது ஆணவத்தோடும் திமிரோடும் ஒரு நிமிடம் வேடிக்கை ஆடலாம்போல என்னுள் புதுக்குரல். நாணாமல், கூசாமல், வெட்கப்படாமல் அவளை நான் பார்த்தேன். என் கண்களே மருட்சி கண்டு, நாணம் கொண்டு, தாழ்ந்து விரிவானுக்கு மாறிற்று அவள் மீண்டும் சிரித்தாள். நான் ஆண்பிள்ளை என்கிற அகங்காரம் என்னுள் மூண்டுவிட்டது.

திரும்பிவிடாமல் அவள் கண்களைப் பார்த்தேன்.

மீண்டும் தோல்வி.

மீண்டும் அவள் சிரித்தாள். கன்னத்தில் போய்ப் 'பளீர்' என்று அறைந்து விடவேண்டும் என்பது போல ஒரு நினைவு எழுந்தது. ஓடிவிட்டாள். அவமானம் என்கிற ஆதங்கம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பசியிலும் கலை வளர்ப்போம்

சூரியனின் கதிர்மேனி சுட்டெரித்த போதும்
சுடுமண்ணில் பதைபதைத்து தொழில் செய்து சோர்ந்து,
வீடு வந்த வேளையிலும் தாகமிகு கலைகள்
ஆடுதற்காய், அண்ணாவிமார்கள் மனை நாடி
பாதமலர் பூசித்து, பண்டைக்கலை வளர்த்தான்
சோர்வடையான்; போர்நிலைகள் சூழினும் கலைமறவான்.

சித்துக்கள் காட்டுகின்ற ஒலியோடு ஒளியும்,
சற்றுமில்லாக் காலத்தில் குப்பி விளக்கொளியில்,
சுற்றி வட்டக் கொட்டகையில் துள்ளியெழும் ஆட்டம்,
பக்தியையும் கலையினையும் பக்குவமாய் கலந்து
பயிற்சிதனை உடலுக்கு ஊட்டி மறைமுகமாய்
கட்டுடலைத் தருகின்ற காவடிகள் ஆட்டம்,


வாள் நுனியில் நடப்பதுபோல் வழுவாத தாள
வகையமைந்த சிந்து நடைக் கூத்துவகையோடு,
தேனெனவே செவிகுளிரச் செய்கின்ற பாடல்
செறிந்தவிசை நாடகங்கள், கோலாட்டம், கும்மி
ஆடிடுவோம் அன்றையநாள் கலைவடிவம் - இன்றை
சூழ்பசியை மறந்திடுவோம் மூழ்கிடுவோம் கலையில்

- புத்தூர் வே.இளையகுட்டி

(நேற்றும் இன்றும் குடாநாட்டின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கலை, கலாசார விழாக்கள் நடைபெறுகின்றன).

# பேருந்தில் மங்கையைப் பின்தொடர்ந்த வாலிபனை நெறிப்படுத்திய வள்ளுவநெறி!

உலக இயக்கம் சுழற்சி முறையிலானது. உயிரின வாழ்க்கை வட்டமும் சுழற்சியிலேயே தங்கியுள்ளது. தொடக்கமும் முடிவுமில்லாத வட்டம் போன்றே உயிரின வாழ்க்கை வட்டமுமாகும். இவ்வாறான இயற்கையின் சுழற்சிக்கேற்ப வாழ்வு நிலைகள் ஆண் பெண் இயல்பூக்கங்களை மையமாகக் கொண்டமைவன. ஆண் அவாவும் கவர்ச்சியும் பெண் அவாவும் கவர்ச்சியும் இயல்பூக்கமெனப்படும். இது வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருந்து உலகியல் வாழ்வுக்கு உத் வேகம் அளிக்கின்றது. வாலிப வயதில் இந்த இயல்பூக்கம் மேலெழுந்து இளவயதினரைச் சுயமிழந்து செயற்படும் படியாகவும் செய்து விடுகின்றது. மனித வாழ்வியல் நடத்தைகளுக்கெல்லாம் வித்தாகி விளைபுலமாகிக் களம் வழங்கி விடுகின்றதனையுங் காணலாம்.



எனினும் மனச் செம்மையுடையார்க்குச் சலனமில்லாத உள்ளப்பிணைப்பை உண்டாக்குவதோடு, கிளர்ச்சியில்லாத நிலையில் பாசமாகிய பிறிதோர் நிலையை எய்துவிக்கும் அதுவோர் செவ்விய பக்குவமான நிலையாகும். இதனாலேயே ஏனைய உறவுகளான தாய், சேய் போன்ற உறவுகளுக் கெல்லாம் பாசம் துணையாகி வாழ்வியலுக்கு வழியமைக்கின்றன.

நம் பண்பாட்டுக் கட்டமைப்பும் ஒருவனுக் கொருத்தி என்ற கற்பியற் செந் நெறிகளும் மேலும் துணைகளாய் அமைகின்றன. இதனா லேயே இவள் என் சகோதரி, இவள் என் மகள், இவன் என் சகோதரன் என்றெல்லாம் உறவிலே தூய்மை பேண முடிகின்றது. அதற்கு இந்தப் பாசம் துணையா கின்றது.

அன்பானது கிளைத்துப் பரந்து பக்தி, காதல், பாசம் என்றெல்லாம் ஆகின்றன. இறைவனிடத்தில் பக்தியென்றும், நட்பிடத்துத் துணையென்றும், மக்களிடத்துப் பாசமென்றும், மனைவியிடத்துக் காதலென்றும் ஆகின்றன. உள்ளத்தில் ஏற்படும் ஈர்ப்பு இக்காதலாகும். இக்காதலானது மற்றெல்லாக் காலத்தையும் விட பருவ வயதில் ஓர் உந்தலாய்த் தோன்றும்.

பருவப் பெண்ணொருத்தி தெருவில் ஒய்யார நடை நடந்து போய்க் கொண்டிருக்கிறாள். பின்னால் ஒரு கட்டிளங்காளை வருகின்றான். அவன் கண்ணில் அவளுருவம் உள்ளத்தை ஊடுருவிச் செல்கின்றது. அவனின் எண்ணத்தில் எத்தனையோ கற்பனைகள் எழுகின்றன. மானசீகமான காட்சிகள். இவளல்லவோ பெண் "அடைந்தால் மகாதேவி இன்றேல் மரணதேவி" எங்கேயோ கேட்ட தொடர். இம்மகா தேவியை அடைவதே இம்மைச் சுகம். சுற்றும் முற்றும் பார்க்கிறான். எப்படியும் வசப்படுத்தி விடவேண்டும் என்று துடிக்கிறான். அவன் எண்ணத்திற்கு இடிவிழுந் தாற் போல பேருந்து ஒன்று வருகின்றது. அவளும் அதனுள் ஏறிக் கொண்டாள். இவனால் தொடர முடியவில்லை - ஏறிக் கொள்ள முடியாவிட்டாலும் பேருந்தின் வழி இலக்கத்தைத் தெரிந்து கவனத்திற் கொள்கின்றான். உள்ளத்துள் ஆசைகள் உருவெடுத்துப் பேயாட்டம் ஆடுகின்றன. அவளைக் காணாததாகக் காரணமாக இருந்த அவளை மீண்டுங் காண நினைந்தது நெஞ்சம்.

அடுத்த நாள் அவள் ஏறிய பேருந்தை எதிர்கொள்கின்றான். இவனின் ஆசைக்குத் தூபமிடுவது போன்று அவளும் ஏறிக் கொள்கின்றாள். அடுத்தவர் தன்னைக் கவனிப்பதையும் உணராதவனாய் நன்றாகவே பார்க்கின்றான் - பேருந்தில் இது சகசம் தானே! என எண்ணிய அவளும் பொருள் செய்யாமலே நிற்கின்றாள்.

இவன் தன்தலையில் யாரோ சம்மட்டி கொண்டு அடிப்பது போல உணருகின்றான் - யாருமில்லை. சட்டை இடுக்குக்குள் மறைந்தும் மறையாதுமிருந்து மின்னிய

## தாலி எப்போதும் பெண்ணுக்கு வேலியே

தங்கவடம் அவன் கண்ணில் தட்டுப்பட்டது. அது அவளை இனங்காட்டியதால் இவளை நினைப்பது கூடாதது. என்றது நெஞ்சம்.

*"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்*
*கறனென்றே ஆன்ற வொழுக்கு"*

என்னும் வள்ளுவ அறம் அந்நெஞ்சை நெறிப்படுத்துகின்றது. வேற்றெண்ணங்களிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக் கொள்கின்றான். தாலி அவனை நெறிப்படுத்தியது. அதற்குக் காலாக அமைந்தது - நெறிப்படுத்தியது - அவன் பயின்ற வள்ளுவநெறி. தாலி பெண்ணுக்குப் பாதுகாப்பே அல்லாமல் அடிமைச்சின்னமல்ல.

சமூகத்தில் கன்னிப் பெண்களையும் கட்டுக்குள் வந்த பருவப் பெண் முதலாய ஏனைய பெண்களையும் வேறுபடுத்தத் தாலி உதவுகின்றது. தாலி பூணுதலாகிய இப்பழக்கம் அன்றிலிருந்து இன்று வரை நம்மத்தியில் சடங்காகிக் கலாசாரமாகிச் செறிந்திருக்கிறது. பெண் இனங்காணப் படுகின்றாள்.

ஆணை எவ்வாறு இனங்காண்பது? ஆணாகிய அந்தக் காளை திருமணமானவனா இல்லையா என்று எவ்வாறு பேதங் காண்பது? பெண் தனித்திருக்கையில் ஒருவன் வீட்டுக்கு வந்தால் பெண் அவனை இனங்கண்டு எப்படி நடந்து கொள்வது - இதற்கும் பண்டையநாளில் வழியமைத்திருந்தார்கள்- அதனைக் கலாசாரக் கூறாக்கியிருந்தார்கள். இவ்வழிமுறை இல்லறத்தின் உயர்பண்பான விருந்தினைத் தருவதற்கு உதவியது - இன்று வரை விருந்தெதிர் கோடல் தவிர்க்கப்பட வில்லை. போற்றப்படுகிறது. காலந்தந்த இடைவெளி விருந்தெதிர் கொள்ளலில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது அவ்வளவுதான்.

வீட்டுக்குள் நுழையும் தெருப்படலையோடு கூடிய ஒருசிறு தங்குமடம். அதற்குச் சங்கடத்தான் படலை எனப்பெயர் உண்டு. இதனை இற்றை நாளில் பரவலாகக் காணமுடியாது. வீட்டுக்குள் இருப்போர் உண்ணுமுன் ஒரு முறை எட்டிப் பார்ப்பார்கள். அந்தச் சங்கடத்தான் படலைக் கொட்டில்; தங்கி இளைப்பாறுவதற்கு வசதியான திண்ணையுடன் கூடியதாக இருந்தமையால் அந்த வழியாற் போகும் போது சிறிது இளைப்பாற, மழை, வெயிலுக்கு ஒதுங்குவதற்கெல்லாம் பயன்பட்டது - அந்தப் படலையுடன் கூடிய கொட்டில் - இக்கொட்டிலில் இருப்போனை வீட்டுக்குள் கூட்டி வருதல் - விருந்து கொடுத்தல் - ஒரு காலத்தில் நிகழ்ந்தது.

விருந்தினனது தன்மையை அறியாமல் வீட்டுக்குள் அழைத்து வந்தால் வம்பாகி விடும். ஆக, அவனையறிய - மணமானவனா, விடலையா, தபுதாரனா (பெண்ணிழந்தவனா) என்றெல்லாம் அறிய - பண்டை நாளில் வழியிருந்தது. பெண்ணுக்குத் தாலிபோல ஆணின் மார்பில் விசேட அணிகலன்கள் விளங்கின.

*******

காப்பியதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிடப் பூக்கள்....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

நான் திரும்பியே பாராமல் இருந்தேன்.

நேரம் பெயர்ந்து கொண்டிருந்தது. அவள் தொலைந்து போய்விட்டாள் என்கிற நினைப்பில் திரும்பினால் அவள்....... அதே சிரிப்பு மாறாமல் இன்னமும் அங்கு நின்றாள். பேசவும் செய்தாள்.

'என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்'.

இவளுக்காய், இவள் ஆணவத்தையும் திமிரையும் அடக்கிவிடுவதற்காய் நான் 'இந்தத் துறையில்' இறங்கியிருக்கலாமே என்கிறாற் போல பெரும் வேதனை மூண்டது. நாலு இடங்களுக்குப் போய் நாலு பெண்களோடும் பழகியிருந்தால்.....?

வெறுப்பைக் கண்களின் வழியே திரட்டி விரிவானையும் சுட்டிக்காட்டி 'இந்த விதானத்தின் மேல் கும்மாளமிடும் அழகுகளை' என்று சொன்னேன். என் உள்ளமே என்னை ஏமாற்றியிருக்கலாமோ? வெறுப்பைக் காட்டுகிறாற் போலக் கனிவைக் காட்டிவிட்டேனோ?

அப்போதே - அப்போதே தான் அவளுக்கு நாணம் பிறந்தாற்போல் இருந்தது.

சடுதியாய் என்மனம் விழித்துக் கொண்டு விட்டது. என் மனதின் சேட்டை எனக்கே அசிங்கமானதாகப் பட்டுவிட்டது. ஒன்றுமே பேசாமல் எழுந்து போக ஆரம்பித்தேன். வடக்கு வீதியில் மணலில் புரளலாம் என்றோ, போவது போல் போக்குக் காட்டிவிட்டு அவள் போனதின் பின்னால் மீண்டும் வந்து உட்கார்ந்து கொள்ளலாம் என்றோதான் நான் எண்ணியிருந்தேன். வாயிலில் நின்றும் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னையே பார்த்தபடி நின்றாள். வடக்கு வீதியின் மணலில் புரண்டபடி இருந்தேன் நான். வடக்கு வீதியைக் கடந்து வாகனம் போய்விட்டதால் அங்கே ஜன நடமாட்டம் அதிகம் இல்லை. புரண்டபடி கிடந்த என்மேல் தன் சேலையின் கீழ் முனைகள் உரசும் படியாய் நடந்து வெகுசமீபமாய் அவள் நின்றாள்.

எனக்கு ஆத்திரம் பற்றிவிட்டது.

'எதற்கு நீ சிரிக்க வேண்டும்?'

அதே நளினம் சீறும் சிரிப்பு.

எழுந்து விட்டேன். நான் நடக்க அவளும் நடக்க ஆரம்பித்தாள். அவளும் இப்படி யாரையேனும் பைத்தியமாக்கிக் கொண்டிருக்கிறாளோ என்று நினைத்தேன். இதழ் வழியே அமுதம் கசிந்து கசிந்து பைத்தியமாக்குகிற சிரிப்போடு அவள் தொடரத் தொடர எனக்குப் பைத்தியம் பிடிக்குமாப் போல இருந்தது. என் கனவுகளும் இலட்சியங்களும் அவள் சிரிப்பின் முன்னால் துகள் துகளாகிறாற் போலத் தான் பட்டது. ஆத்திரத்தைக் கொட்டுகிறாற் போல என் பலவீனத்தையே காறி உமிழ்கிறாற் போல 'தூ' என்று துப்பினேன்.

அவள் முகம் வேதனையில் சுண்டிப்போய் விட்டது. மிக்க பரிதாபகரமாய் விட்டது. அந்தப் பலவீனத்திற்கு அடிபணிந்து விடுவதற்கு நான் தயாராக இல்லை.

''மேல் விதானத்தில் கும்மாளமிடுகிற அழகுகள் இப்போது 'தூ' என்று ஆகிவிட்டதோ?'' என்று சொல்வது எனக்குக் கேட்டது. நான் பேசாமலே நடந்து விட்டேன்.

என்னைத் தொடர்ந்து தொடர்ந்து வந்ததால். 'மேல் விதானத்தின் மேல் கும்மாளமிடுகிற அழகுகள்' எல்லாம் காறி உமிழ்கிறாற் போலாகி விட்டது. என்று நயம்படும் படியாய்த்தான் சொன்னாள்.

நண்பனை எங்கேயென்று தேடுவது? அவளிடமிருந்து தப்பி வீடு போய்ச் சேர்ந்து விட்டாற் போதுமென்று ஆகிவிட்டிருந்தது. வீட்டிற்கு வந்து முதல் வேலையாய்க் காலலம்பி விட்டு சுவாமி விவேகானந்தரின் திருப்படத்தின் முன்னால் நின்றபடி அவர் கண்களை உற்றுப் பார்த்தேன். எனக்கு அழுகை வீறிட்டுப் பெருகியது. அவர் பேசுமாப் போல இருந்தது.

'தம்பி'

எனக்குத் தேகம் புல்லரிக்க ஆரம்பித்துவிட்டது. மயிர்க் கால் தோறும் இலட்சியக் கனல் ஊர்ந்து உள் புகுந்து சுடுநீராய்ப் பெருகித்தகிக்கிறாற் போல இருந்தது. ஒரு நொடி தான். கனிவு சொட்ட அந்த அழைப்பு மாறிற்று.

'தம்பி, உன் எழுத்தில் தெரியும் பரிசுத்தங்கள் உன் பேச்சில், பார்வையில், நினைப்பில் ஏற்படும் பரிசுத்தங்களின் பிரதிபலிப்பாயிருக்க வேண்டும். இந்தச் சலனத்திற்கு நீ ஆட்படாதே. எழுத்தை நீ என் முன்னால் உன் இலட்சியமாய் ஏற்றுக் கொண்டாய். அதை நாணும் படியாய் நீ ஆக்கிவிடக் கூடாது.'

அந்த நிமிடமே அந்தப் பெண்ணின் கரு நீலக் கண்களும், அதில் புரளும் அற்புத சௌந்தர்யங்களும் குமிழியிடக் குமிழியிடச் சிரிக்கும் சிரிப்பும் மறைந்து விட்டன. அந்தக் கம்பீரமான உருவத் தில் இருந்தும் சலனத்தையே கண்டறியாத அவ ரது மனம் என்னுள் இறங்கிவிட்டாற் போலிருந்தது.

இரண்டு ஆண்டுகளின் பின்னால் இப்போது ஒரு சலனம். அவளுக்காய் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். எனக்கே அசிங்கமாயிருந்தது. என் கதைகளிலே கூடத்தான் இது வரை நான் எழுதாத வரிகளாயிருந்தன.

அறையை விட்டு எழுந்து, வாராந்தாவில் வந்து படுத்த படி அவளை நினைத்துப் பார்த்தேன். இரண்டு ஆண்டுகளிற்கு முன்னால் அவள் சிரித்த சிரிப்பு இப்போதும் பசுமையாயிருக்கிறது. நெஞ்சில் ஆதங்கம் மூண்டுவிட்டது. அத்தனை தூரம் அவமானப்படுத்தியிருக்கக் கூடாதென்பது போல ஒரு வருத்தம் மனதைப் பிசைந்தது.

தபாற்காரன் குரல்.

எழுந்து போய்க் கடித்ததை வாங்கினேன். எழுத்து உருண்டு உருண்டு முத்துக் கோர்த்தாற் போல இருந்தது. மனம் துள்ளக் கடிதத்தைப் பிரித்தேன்.

கடிதத்தின் வரிகள் ஓடின. ''இரண்டு ஆண்டுகளாய் வீதியிலும் தெருவிலும் சந்தியிலும் பிற இடங்களிலும் உங்களைப் பார்ப்பதற்காய் நான் அலைந்திருக்கிறேன். நீங்கள் சந்தித்ததில்லை. துறவியாய் எங்கேனும் போய்விட்டீர்களோ என்று சந்தேகப்பட்டேன். எப்படியோ நினைப்பையே தவமாக்கிச் செய்த பிரார்த்தனையில் உங்கள் இருப்பிடத்தை அறிந்து கொண்டேன். படத்தைப் பார்த்தால் உங்களுக்கு என்னைத் தெரியுமே? இராமர் சீதையைச் சந்திக்க அனுப்பியபோது அடையாளமாய்த் தனது கணையாழியைக் கொடுத்து உறவைத் தெரிவித்துக் கொண்டாற் போல 'மேல் விதானத்தில் கும்மாளமிடும் அழகுகளைப் பார்க்கிறேன்' என்ற உங்களது வார்த்தைகளையே சொல்லிக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. உங்களின் வரண்ட தத்துவ விசாரங்கள் போய் உங்கள் உள்ளத்தில் நளினமான பெண்ணைப் பற்றிய எண்ணங்கள் எழுமானால் என்னை வந்து சந்திக்கலாமே? உங்களுக்காக இன்னும் இன்னும் தவம் செய்து கொண்டிருப்பேன். படம் அனுப்பியிருக்கிறேன். துப்பி விடாதீர்கள்.'

மனதில் சலனம் எழுந்தால் அது பெருகிப் போக ஆரம்பித்து விடுகிறது. தடுத்து நிறுத்தி 'இவை உனக்கு ஏற்றவையல்ல. ஏற்றவையே அல்ல' என்று மனம் கதறிக் கதறி அழுதாலும் கற்ற நூல்களின் பொருள்கள் வந்து ஒரே சமயத்தில் குவிந்தாலும் மனதில் பிளந்த சலனத்தைத் தடுத்து நிறுத்தி விடுகிறதில்லை. அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நெஞ்சு துடிக்க ஆரம்பித்து விட்டது.

விலாசத்தைத் தேடிக் கொண்டு போனேன்.

அவள் வாயிலில் நின்றாள். இரண்டு ஆண்டுகளுக்கிடையில் அவள் அழகாய் இன்னும் அழகாய் பொலிந்து போயிருந்தாள். வீடு பழம் வீடாயிருந்தது. வறுமையின் கோலங்கள் அங்கு மிங்குமாய் மிதந்து நின்றாலும் அவள் பேரரசியாய் நின்றாள்.

'வாருங்கள்' என்று வரவேற்றாள்.

இருக்கச் சொல்லி ஒரு கதிரையைப் போட்டாள்.

நெடு நாட் பழகியவளைப் போல என் சேம லாபங்களை விசாரித்தாள். அதே குமிழிடுகிற சிரிப்போடு. என்னையே இமையாது, இமையாது பார்த்தாள்.

'என்ன வேண்டும்?'

பேசாமல் இருந்தேன்.

'சொல்லுங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்' மிகவும் நிதானமாய் வார்த்தைகளை இழுத்து நிறுத்தி நிறுத்திக் குமிழிடும் சிரிப்போடு கேட்டாள்.

'பேசுங்களேன்'.

நான் பேசாமலிருந்தேன்.

மகத்தான காரியத்தைச் செய்யப் பிறந்திருக்கிறேன் என்கிறாற் போல எனக்கு அடிக்கடி ஒரு நினைவு மனத்தே எழுவதுண்டு. எனது பஜீப் பறையில் மாட்டப்பட்டிருக்கும் சுவாமி விவேகானந்தரின் அற்புத உருவம் என் முன்னால் தெரிகிறாற் போல இருக்கும். சலனங்கள் ஏற்படாமல் அவற்றைத் 'தூ' என்று காறி உமிழ்வதற்கான நெஞ்சும்-அந்த நினைவு தந்த வெற்றிதான். அவள் தேநீர் போடவோ எதற்கோ உள்ளே போனாள். சடுதியாய் எழுந்து ஓடி வந்துவிட்டேன்.

வீட்டிற்கு வந்து முதல் வேலையாய் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அற்புதமான விவேகானந்தரின் கண்களைப் பார்த்தபடியே கடித்தை எழுதினேன். மிகவும் வேகமாய் மிகவும் வேகமாய் கடிதவரிகள் உருண்டன.

பெண்ணே!

உனக்காய் இப்போது நான் விம்மி விம்மி அழுகிறேன்.

நீயே பெருமளவு காரணமாகி என் நெஞ்சரங்கில் ஏற்ற முயன்ற உன்னைப் பற்றிய நளின நினைவுகள் இந்த நிமிடத்திலிருந்தும் கருகி உதிருகின்றன. இந்த நிமிடம் உன் புனிதமான இருதயத்திற்காகவும் உன் நல்வாழ்விற்காகவும் நான் நெகிழ்ந்து நெகிழ்ந்து பிரார்த்திக்கிறேன். நீ என்னைப் புரிந்து கொண்டு அன்பு செலுத்த முயன்ற நினைவு, பெண்ணைப் பற்றிய இனிய நினைவுகளுள் இனிய நினைவாய் இருக்கும். பல ஆண்டுகளுக்கு முன்னால் என் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உனக்கு நான் அப்படியே எழுதுகிறேன். அதை நீ புரிந்து கொள்ளக் கூடுமானால் உன் அன்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் நான் உதறிவிடுவதற்கு என்னை நீ மன்னித்து விடக்கூடும்.

ஒரு சமயம் இந்து தத்துவங்களின் பெயரையே தெரியாத இளைஞர்களும், பெரியவர்களும், சின்னவர்களும், ஆணும், பெண்ணும் எல்லோருமாய்க் கூடிக் கூடி என் கதைகளை வார்த்தைக்கு வார்த்தை பரிசோதித்தார்கள். என் கண்களையும், கண் பார்வையையும் சிரிப்பையும் உடையையும் தோற்றத்தையும் பார்த்து என் எழுத்தோடு பொருத்தினார்கள். தம் அறியாமையாகிய அளவுகோலால் என்னை மந்திரவாதியாகவும், இராமகிருஷ்ணராயும் ஆக்கிவிட்டார்கள். 'நான் எதைப் பார்க்கிறேன்' என்பதை எல்லாம் வேவு பார்க்க மனிதர்கள் பெருகி நின்ற சமயம் அது. என்னை வேவு பார்த்த மனிதர்கள் எல்லோரையுமே நான் பைத்தியங்களாக்கி இருக்கிறேன். அவர்களைப் பைத்தியங்களாக்குவதற்காய் மேலேயும் கீழேயும் பார்த்துப் பார்த்து நான் துறவியாய் நடித்த நடிப்பில் என் கண்கள் கூட நோ எடுத்துவிட்டிருந்தன. உணர்வுமயமாய் நான் எழுதிய எழுத்திற்கு நானே அர்த்தம் கண்டுபிடித்து அவற்றைத் தாகூரின் பேரிலும், பாரதியின் பேரிலும் சுமத்தி விட்டு - பைத்தியங்களாய் இந்த உலகத்தை ஆக்கிவிட்ட சிரிப்பில் நான் மகிழ்ந்தது என்னவோ உண்மைதான். கலையைப் பின்பற்றுகிற - கலைப் பயிற்சியில் ஈடுபட்ட எவருக்கும் இயல்பாய் அமையும் 'மயக்கத்தைத் தருகின்றாற் போன்ற கண் அமைப்பை' புனிதமான யோகியின் கண்களுக்கும் மந்திரவாதியின் வெறிக் கண்களுக்குமாய் ஒப்பிட்டு நின்ற அந்த மனிதர்களை நான் உற்று உற்றுப் பார்த்தே கதிகலங்கப் பண்ணியிருக்க முடியும். ஆனாலோ என்னால் அழத்தான் முடிந்தது. தம் சமயத்தின் அந்தரங்கமான இரகசியங்களைப் புரிந்துகொள்ள முடியாத அந்த மனிதர்களை நொந்து ஆகிறது என்ன? சந்தி முகப்புகள், பஸ் நிலையங்கள், வீதி முகப்புகள் என்று இன்றைக்கு ஒன்றையுமே தெரியாமல், தெரிந்து கொள்ள விருப்பமில்லாமல் பெருகி நிற்கிற இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டி விடுவதாய் அப்போதேதான் சத்தியம் செய்தேன். இந்தக் கனலை ஏற்றுவதற்குக் 'கிப்நொடிஸ்' முறையோ அல்லது தாயையும் குழந்தையையும் வழிபடுகிற முறையோ உதவி விடாது. இது வாழ்க்கைப் போராட்டம். எழுதுகிறவன் அழிகிற போராட்டம். வேறு நினைப்பின்றி அந்த இலட்சியத்தையே நினைந்து நினைந்து வாழ்ந்தால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும். அந்தச் சாதனையில் அவன் அழிகிறான்.

இந்த அழிவில் உன் அற்புதமான இருதயத்தையும் என்னோடு பிணைத்து அழித்துக் கொண்டு விடுவதாய் எனக்கு உத்தேசமில்லை. நீ என்னை மன்னித்து விடவேண்டும்...........

* * *

நிமிர்ந்து விவேகானந்தரைப் பார்த்தேன். அவர் கண்களைப் பார்த்தபடியே சொன்னேன்.

''நீங்கள் சலனமேயில்லாமல் எப்படி வாழ்ந்திருக்கிறீர்கள், என்று இப்போது தான் எனக்குப் புரிகிறது. இலட்சிய வாதியின் மனதிலும் ஒரு சமயம் காதல் அரும்புகள் அரும்புகின்றன. ஆனால் அவை ஒரு நிமிடம் மட்டுமே வாழ்கின்றன. அவன் வரையில் காதல் நிமிடப் பூக்கள்தான்.''

அவர் சிரிக்கிறாற் போலப் பட்டது.*****

*(நன்றி - ஈழநாடு -1966)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 19

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | ■ | 6 |
| 7 | | | | ■ | 8 | 9 | |
| | ■ | | ■ | 10 | | | |
| 11 | 12 | | 13 | | | | |
| 14 | | ■ | 15 | | ■ | 16 | |
| | ■ | 17 | | | 18 | | ■ |
| ■ | 19 | | | ■ | 20 | | 21 |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 19**

**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (30.07.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 19இல் வெற்றிபெற்றோர் விவரம் 03.08.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

**இடமிருந்து வலம்**

1. திருமண பந்தம் நீக்கப்படுவதை இப்படி அழைப்பர்.
7. சேதமுற்று எஞ்சிக் கிடப்பது.
8. கை, கால்களில் வரும் நோய்; நோவும் கூட.
10. வயல் எல்லையில் அமைப்பர்.
11. மீண்டும்/ மீளவும்.
14. களி/ சுவை
15. பழம்.
16. தாங்கள்.
17. முயற்சி.
19. தானியங்கள் அளவிடும் ஓர் அலகு.
20. கண் தெரியாதவன்.
22. ஒரு பறவை. இதன் பார்வைக்குப் பெருமை உண்டு.
23. மேற்குத் திக்கு.

**மேலிருந்து கீழ்**

1. ஆச்சரியம் தருவது; வழமைக்கு மாறானது.
2. வாதம் செய்பவன்.
3. குழப்பம்/சண்டை/யுத்தம்.
4. மேல் நாட்டுக் குடிவகை.
5. துளை.
6. தாமரை.
9. தமது.
10. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் நகரம்.
12. நாவு உணரும் சுவை.
13. கூறல்.
16. நீர் நிலை ஊடான நீண்ட பாலம்.
17. பிழைத்துப் போனது.
18. இந்த யோகம் கிட்டினால் உயர்வும் தாழ்வும் மாறிமாறி வரும்.
19. ஒரு சிற்றுயிர்:வளைந்து, நெளிந்து, அசையும்.
21. திக்கு.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 17 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) முகாமைத்துவம். (6) கனல். (7) வலி. (9) மல். (10) கர்ப்பம். (11) திருப்பு. (12) துரும்பு. (13) அணி. (14) பருப்பு. (15) தாலி. (16) சம்பாதி. (18) சுத்திகரி. (19) பாறை.

**மேலிருந்து கீழ்**

(1) முகமன். (2) கானல். (3) மைல். (4) துவர்ப்பு. (5) வலிப்பு. (8)அம்மணி. (10) கரும்பு. (11) திருப்பதி. (12) துரு. (13) அலிபாபா. (14) பஞ்சு. (15) தாம். (16) சரி. (17) திறை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 17 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — **வி.விஜியலதா,** *8 ஆம் வட்டாரம், நயினாதீவு.*

**2 ஆம் பரிசு** — **சி.நிந்துயா,** *யா/ மகாஜனக் கல்லூரி 2009 உயர்தரம் கட்டுவன் மேற்கு தெல்லிப்பழை.*

**3 ஆம் பரிசு** — **வாசுதேவன் அநந்தன்,** *அருணோதயம், நாவலடி, புலோலி மத்தி பருத்தித்துறை.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) உ.பிரணவிகா**
இல : 48, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**(2) க.சதாசிவ ஐயர்,**
இல: 237, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**(3) செல்வி [illegible],**
5 ஆம் வட்டாரம், அனலைதீவு.


**(4) சி.குருபரன்,**
'ரவி இல்லம்' கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

**(5) செல்வி.மகேஸ்வரக்குருக்கள் வித்யா,**
தரம் 11, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயுற்ற சிறுவர்களின் மனமகிழ்விடமாக போதனா வைத்தியசாலையில் ஒரு நந்தவனம்

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்று முதுமொழி சொல்வார்கள். சிரிக்கும் பொழுது உள்ளத்தில் ஏற்படும் மகிழ்வினால் மனம் பாரம் இழக்கின்றது. இதனால் உடலில் தெம்பு பிறக்கின்றது. உடல் புத்துணர்ச்சி அடைகின்றது. எனவே நோயுணர்வு அற்ற உடம்பாக உணரமுடிகிறது. இப்படியான உணர்வை சிறுவர்கள் விளையாடும்பொழுது உணர்ந்து அனுபவிக்கின்றார்கள். அவர்களது மகிழ்விடம் இயற்கை வனப்புமிக்க சூழலும், விளையாட்டுத் திடலும்தான்.



இவற்றை உணர்ந்ததன் வெளிப்பாடாய் யாழ்.போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவினர் அவர்களது விடுதியோடு இணைந்த பகுதியில் அழகிய சிறுவர் நந்தவனத்தையும், சிறுவர் விளையாட்டிடத்தையும் மிக அழகிய முறையில் நேர்த்தியாகத் திட்டமிட்டு உருவாக்கி உள்ளனர். இந்த நந்தவனம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.அரச அதிபர் கே. கணேஷினால் திறந்து வைக்கப்படுகின்றது.

**புதிய நந்த வனம்**

சிறுவர் விடுதிக்கு அருகே அனாதரவாகக் கைவிடப்பட்டிருந்த நிலப்பரப்பை சிரமதானம் செய்து, வளமான மண்ணிட்டு பூங்கன்றுகளையும், சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடியதாக நற்செடிகளையும் அழகிய முறையில் அமைத்துள்ளனர். மனதைக் கவரக்கூடிய வர்ணங்களையும் பயன்படுத்தி உள்ளனர். இடையிலே சிறுவர் விளையாட ஆடும் ஊஞ்சல், சுற்றும் ஊஞ்சல், சறுக்கி விளையாடும் தளம், இராட்டினம் போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன. தாமரைத் தடாகமும், முயல், வாத்து போன்ற வளர்ப்புப் பிராணிகளும், மீன் தொட்டியும் மனதைவிட்டு பொழுதை போக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளன.

**விளையாட்டிடமும் கற்றல் பகுதியும்**

அடுத்து சிறுவர்கள் ஓடிவிளையாடக் கூடியவாறு ஒரு மண்டபம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கே பெரிய பொம்மைகளும், கார், சைக்கிள் போன்ற விளையாட்டு உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளன. அதனருகே வகுப்பறை போன்ற ஒரு பகுதி அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஓர் ஆசிரியர் நோயாளர் விடுதியில் தங்கி உள்ள சிறுவர்களுக்கு ஏற்றவாறான கற்பித்தல்களை மேற்கொள்ளக்கூடிய ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுகாதாரம், போசாக்கு, நடத்தையியல், உளவியல் போன்ற அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## அதனை மேலும் மெருகூட்டுவதற்கு நிதி வசதிகள் தேவைப்படுகின்றன

ஓர் ஒதுக்குப்புறமாக இருந்த இடம் பார்வைக்கு இதமான ஓரிடமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய விடயமே ஆகும். இப்படியான ஒரு நந்தவனம் வைத்தியசாலையில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிறுவர் விடுதியில் உள்ள நோயாளர்கள், வேறு விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் சிறுவர், சிறுவர் கிளினிக் நோயாளர் போன்றோர் இந்த நந்தவனத்தை பாவித்து பயனுறக் கூடியவாறு இருக்கும்.



குழந்தை வைத்திய நிபுணர் எஸ்.கே. அருள்மொழி, டாக்டர் கே. அற்புதராஜா மற்றும் சிறுவர் விடுதி வைத்தியர்கள், தாதியினர், ஊழியர்களின் முயற்சியினால் இந்த நந்தவனம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**நிதி உதவி**

சிறுவர் பாதுகாப்பு நிதியம், மற்றும் சில தனி அமைப்புகள், தனிநபர்கள், வர்த்தகர்கள், நலன்விரும்பிகள் எனப் பல தரப்பட்டவர்களினதும் நிதி உதவியினால் இந்த நந்தவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென அரசாங்கம் நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளவில்லை. இந்த நந்தவனத்தினை தொடர்ந்து அழகிய முறையில் மேலும் மெருகூட்டி நோய்வாய்ப்பட்ட சிறுவர்கள் மகிழ்ந்து விளையாட மேலும் நிதி தேவைப்படுகின்றது. எனவே இதற்கென பராமரிப்பிற்கு தொண்டு நிறுவனங்களினதும்நலன்விரும்பிகளினதும் உதவிகளை அவர்கள் எதிர்பார்த்து வருகின்றார்கள்.

-பஞ்சவர்ணன்-

# 13 வயதிலிருந்தே பாரம்பரியக் கலைகளில் ஈடுபடுபவருக்கு உந்துதல் அளித்தது அவரின் நெய்தல் நிலக் கிராமம்



சமூகக் குழுமமொன்றின் வரலாற்று இருப்பியற் தொடர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கு, குறித்த சமூகத்தின் கலைகளே நிலைக்களனாக அமைகின்றன. அந்தவகையில் ஈழத்துச் தமிழ்ச் சமூகத்தின் முதுசெம்களாகக் காணப்படுகின்ற பாரம்பரியக் கலைகள் பலவும் தற்போது 'சேடமிழுக்கும்' நிலையிலேயே உள்ளன. நவீன கலைவடிவங்களின் உள்வருகையும், சினிமா, தொலைக்காட்சி போன்ற விஞ்ஞான பொழுதுபோக்குச் சாதனங்களின் பெருக்கமும் இந்நிலையைத் தோற்றுவித்துள்ளன. எனினும் பாரம்பரியக் கலைகளை அழியவிடாது காக்கின்ற ஒரு சிலரும் நம்முள்ளே இருக்கவே செய்கின்றனர். இவர்களுள் பாஷையூரைச் சேர்ந்த வஸ்தியாம்பிள்ளை ஜேக்கப் (அல்பிரட்) முக்கியமானவராகக் கொள்ளத்தக்கவர்.

07.12.1939 இல் பாஷையூரில் பிறந்த இவர் தன்னுடைய 13 வயதிலிருந்தே, பாரம்பரியக் கலை வடிவங்களான நாட்டுக் கூத்து, இசைநாடகம் என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றார். சிறந்த குரல்வளமும், நடிப்புத் திறனும் கொண்ட அல்பிரட் ஈழத்தின் பல பாகங்களிலும் தன் ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்தியுள்ளார். கலைச் சேவைக்காக பல விருதுகளும் இவரைத் தேடி வந்துள்ளன.

**பெற்ற பட்டங்கள்**

பேராசிரியர் சு.வித்தியானந்தனால் வழங்கப்பட்ட ''தேசிய கலை வேந்தன்'' (1978), கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையால் வழங்கப்பட்ட ''கலைப்பொக்கிஷம்'' (1979), ''எழிலிசை வேந்தன்'' (1981), பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்பட்ட ''மிருதங்க வித்துவான்'' (1993), வட.கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைச்சினால் வழங்கப்பட்ட ''கலைஞானகேசரி'' (2001), யாழ்.பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட ''யாழ் ரத்தினா'' (2003), கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட ''கலாபூஷணம்'' (2007) என்பன அவர் பெற்றுக்கொண்ட விருதுப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அவர் தம்முடைய அனுபவங்களை 'உதயன்' வாசகர்களுடன் இங்கே பகிர்ந்து கொள்கிறார்.

**கேள்வி:-** பாரம்பரிய ஆற்றுகை வடிவங்களில் ஈடுபடவேண்டுமென்ற உந்தல் உங்களிடம் எப்படி ஏற்பட்டது?

## எமது கலைகளை அழியவிடாது காப்பது இளைஞர்களின் கடமை என்கிறார் ஜேக்கப்

**அல்பிரட்:-** நான் பிறந்து வளர்ந்த பாஷையூர் ஒரு நெய்தல் நிலக் கிராமம். கடலில் தொழில் செய்து களைத்துப்போன நெய்தல் நில மக்களுக்கு தெம்பு தருவதற்காக அடிக்கடி இங்கே கூத்துகள் நடக்கும். அவற்றை என் சிறுவயது முதலே பார்த்துப் பழகியதால், என்னுள் இயல்பாகவே கூத்துக்கள் மீதான ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. என்னுடைய 13 ஆவது வயதில் ''புனிதவதி'' என்ற நாட்டுக்கூத்தில் நடிக்கத் தொடங்கி, இன்றும் நாட்டுக்கூத்து , இசை நாடகத் துறைகளில் இயங்கி வருகின்றேன்.

**கேள்வி:-** நீங்கள் இதுவரை நடித்த நாட்டுக்கூத்துக்கள் சிலவற்றைப் பட்டியலிட முடியுமா?

**அல்பிரட்:-** நிச்சயமாக, நான் ஞானசவுந்தரி, கண்டியரசன், சாந்தோமையார், வீரத்தளபதி, அந்தோனியார், கிளியோபட்ரா, சவேரியார், பூதத்தம்பி முதலான பல கூத்துக்களில் பங்கேற்றுள்ளேன். இவற்றில் பெரும்பாலானவை கிறிஸ்தவக் கூத்துக்கள். நான் பிறந்த சூழல் என்னை அதிகளவில் கிறிஸ்தவக் கூத்துகளிலேயே பங்குகொள்ளச் செய்துவிட்டன. ஏறக்குறைய 40 நாட்டுக்கூத்துக்களில் நடித்த அனுபவம் எனக்குண்டு.

**கேள்வி:-** நீங்கள் இசைநாடகத்துறையிலும் செயற்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. அப்படியானால் அது பற்றிச் சொல்லுங்களேன்?

**அல்பிரட்:-** பொதுவாகவே நான் ஆறரை கட்டை சுருதியில் பாடக் கூடியவன். இந்த சாரீர வளத்தினால் , பாடல்களால் கதையை நகர்த்திச் செல்லும் இசைநாடகத்துறையில் நான் சிறப்பாகச் செயற்பட முடிந்தது.

**கேள்வி:-** நீங்கள் பங்கேற்றுள்ள இசை நாடகங்கள் சிலவற்றை கூற முடியுமா?

**அல்பிரட்:-**பத்துக்கட்டளை, வளையாபதி, ஞானசௌந்தரி, விதி, யேசுவின் திருப்பாடுகள் என்பன போன்ற 8 இசை நாடகங்களில் நான் பாடி நடித்துள்ளேன்.

**கேள்வி:-** நீங்கள் பாரம்பரிய ஆற்றுகை வடிவங்களில் ஒரு நடிகராக மட்டுமன்றி அண்ணாவியாராகவும் உங்களை நிலை நிறுத்தியுள்ளீர்கள் அதுபற்றி.......?



எஸ்தாக்கியார் நாட்டுக் கூத்தில் கப்பல் தலைவன் வேடத்தில் அல்பிரட்....

**அல்பிரட்:-** நாட்டுக் கூத்துக் கலையில் நடிகனைக் காட்டிலும், அதன் நெறியாளரான அண்ணாவியாரே முதன்மையானவராகக் கொள்ளப்படுகின்றார். அவ் வகையில் இதுவரை 17 இற்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துக்களுக்கு நான் அண்ணாவியாராக இருந்துள்ளேன். மிருதங்கத் துறையிலும் என்னுடைய பங்களிப்பு ஓரளவு இருக்கவே செய்கின்றது.

**கேள்வி:-** பாரம்பரியக் கலைகளின் நிலை இன்று எவ்வாறுள்ளது?

**அல்பிரட்:-** புதிய தலைமுறையினர் இக்கலை வடிவங்களைத் தொடர்ந்து கைக்கொள்ளாததன் காரணமாக, ஒரு தொடர்ச்சியான கையளிப்பு நிகழ முடியாமற் போகின்றது. இதனால் பாரம்பரியக் கலை வடிவங்கள் தம்முடைய இறுதிக் காலத்தை எட்டி நிற்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

**கேள்வி:-** இந்நிலையை மாற்றுவதற்கு நீங்கள் ஏதாவது முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா?

**அல்பிரட்:-** கூத்தின் மீது ஆர்வம் கொண்ட பல இளைஞர்களுக்கு ஓய்வு நேரங்களின் போது கூத்தின் ஆட்ட நுட்பங்களைப் பயிற்றுவித்து வருகின்றேன். இது தவிர கூத்துக்களில் பயன்படுத்தப்படுகின்ற 157 வகையான ராகங்களை பாஷையூரைச் சேர்ந்த பறுணாந்து மேரி அன்றின் ஈஷவுடன் இணைந்து பாடி, அதனைப் பதிவு செய்து கனடா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ளேன்.

**கேள்வி:-** இன்றைய இளைய தலைமுறையினருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**அல்பிரட்:-** இளைய தலை முறையினருக்கு மட்டுமல்லாது, எல்லோருக்கும் நான் சொல்வது இதுதான். எங்களுடைய கலைகளை அழியவிடாது பாதுகாக்க எல்லோரும் முன்வர வேண்டும். *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



### திரு.கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்

SLPS - 2-I, விசேட கணிதப் பயிற்சி
(அதிபர் - யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை)

**சேவை விவரம்**

1. மட்/பெரிகல்லாறு ம.வி. 08.02.72 - 31.12.73
2. மட்/செட்டிப்பாளையம் ம.வி. 01.01.74 - 28.02.77
3. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.03.77 - 31.12.78
4. யா/நயினாதீவு ம.வி. 01.01.79 - 31.03.88
   ஆசிரியர் சே.க.ஆலோசகர் கணிதம்
5. யா/புங்குடுதீவு ம.வி. 01.04.88 - 07.03.89
   ஆசிரியர் சே.க.ஆலோசகர் கணிதம்
6. யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி. 08.03.89 - 21.02.91
   ஆசிரியர், அதிபர் தரம் - III
7. யா/சன்மார்க்க ம.வி. 22.02.91 - 31.12.94
   ஆசிரியர், உபஅதிபர், அதிபர் தரம் - II
8. யா/நல்லூர் இ.த.க.பாடசாலை பிரதி அதிபர் 01.01.95 - 28.03.99
9. யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை அதிபர் 29.03.99 - 19.01.2006
10. யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி. அதிபர் 20.01.2006 - 20.07.2008

எமது பாடசாலை அதிபராகி நற்சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் இவ்வேளை உங்கள் சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை. (76397)
வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள், மாணவர்கள்.



## நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி அருந்தவாஸ்வரி இரகுநாதன்

புவியில் 07★04★1919
சொர்க்கத்தில் 22★07★2005

திதி: ஆடி அபரபக்க துதியை
20.07.2008



என்னை அன்புடன்
- அரவணைத்து
அமுதூட்டி அறிவூட்டி
ஆளாக்கிய தெய்வமே!
என்றும் உங்கள் நினைவுடன்.

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (76390)

அன்பு மகள்:
செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.



## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (76028)



## ஃபக்ஸ் வசதி

சாவகச்சேரியில் ஃபக்ஸ் வசதியுடன் கூடிய தொலைத்தொடர்புகளுக்குத் தொடர்புகொள்ளவும்.

**அரசடி கொமினிக்கேசன்**
கண்டி வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரி
(தாமோதரம்பிள்ளை வீதி முகப்பில்).
(சி/553804) T.P./Fax: 021 226 3888



## ORIENDAL AQUARIUAM விற்பனைக்கு

சகலவிதமான வளர்ப்பு கலர்மீன்களும் மீன் தொட்டி உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **மலிரி பாம்**
61, இராமநாதன் றோட்,
[நாச்சிமார் கோயில் முன் றோட்], யாழ்ப்பாணம்.



## தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி அறிவுடைய (Word, Excel) அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:
**NEW GOLDEN STAR**
226, Ramanathan Road,
Thirunelvely. T.P.: 077 4011254. (76431)



## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலைவேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவுமுறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!
தொலைபேசி: 2360488, 2360694, 4873929



புதிய இணைப்பிற்கும்,
கட்டணங்கள்,செலுத்துவதற்கும்
**SATS - TECH**
(TRCSL அனுமதிபெற்ற நிறுவனம்)
DIAL: 021 2225908, 2228812
0777 710785
(76366)



## MJ MAHARAJ



உள்ளூர் VAN சேவை
1 km = Rs.40
உடன் அழையுங்கள்
222 6659, 077 3114803, 222 9653 (76094)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வடிவநாதன் கஜீப்பிரவீன்

மண்மகிழ 19★08★1986
கண்நெகிழ 31★07★2007

நிலையில்லா உலகில் வாழ்கின்றோம் கண்ணீரில்
நாம் இருக்கும் நாள்வரையில்
நீ இருப்பாய் எம் இதயத்தில்.

7/1, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
உனது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள். (76383)



## புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றம்

### முன்னாள் போஷகர் அமரர் சோமசுந்தரம்பிள்ளையின் முதலாம் ஆண்டு நினைவுதினம்

இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12 மணிக்கு முதல்வி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜையும், அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் வழங்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.ப.ஆனந்தநடேசன்
தலைவர்.

பா.இரகுவரன்
பொதுச்செயலாளர். (சி/553789)




# 25 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி


## ( யூலை 25, 27 )

## தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்

## ( 25 - 07 - 2008 )



ஆரம்பகாலத் தலைவர்
தங்கத்துரை



ஆரம்பகாலத் தளபதி
குட்டிமணி

1983ம் ஆண்டு யூலை மாதம் 25ம், 27ம் திகதிகளில் கொழும்பு வெலிக்கடை வெஞ்சிறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ தேச விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன் நடேசுதாசன், குமார், சிவபாதம், சிறீகுமார், குமாரகுலசிங்கம், மரியாம்பிள்ளை உட்பட 53 தமிழ்த் தேசிய வீரர்களுக்கும் மீண்டும் எமது கண்ணீர் அஞ்சலி.

தமிழ் ஈழ மண் காப்போம் !
தாயகம் மீட்போம் !!

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ( ரெலோ )
TAMIL EELAM LIBERATION ORGANIZATION ( TELO )
www.telo.org.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புதுமடம் உடுவில் தெற்கு, மானிப்பாய் ஸ்ரீ சித்தி விநாயகர் கட்டட வளர்ச்சிக்காக நிதியுதவியளித்த சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணிக்குழுத் தலைவருமான

கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும், உடுவில் பிரதேச இணைப்பாளர் ஆகியோரையும் நன்றியோடு பாராட்டுகிறோம். அத்தோடு அவர்கள் பணி மேன் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதுமடம் ஸ்ரீ சித்தி விநாயகர் பரிபாலன சபையினர்,
(76335) *புதுமடம், உடுவில்.*

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கூறுவிலை கோரல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அமைந்துள்ள வளாகத்தில் கீழே குறிப்பிடப்படும் இரு கட்டடங்களில் மீளமைப்பு, பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

1. **அலுவலக கட்டடத்தின் பின்புறத்தில் உள்ள தற்காலிக கொட்டகை - மீளமைத்தல்**
2. **பிரதான காரியாலயம் - பராமரிப்பு வேலை**

மேற்குறிப்பிட்ட வேலைகளை காரியாலய நேரத்தின்போது பார்வையிட்டு அதற்கான ஆவணங்களையும் பெற்று, விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை 25.07.2008இற்கு முன்பதாக எமது காரியாலயத்திற்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வேலைகள் யாவும் கிளை நிர்வாக உத்தியோகத்தரின் அறிவுறுத்தலின் பேரில் நடைபெறும்.

கௌரவ தலைவர்,
இ.செ.ச, யாழ். கிளை. (சி/553807)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை நிரஞ்சன்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொலண்டை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நிரஞ்சன் கொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (புகையிரதப்பகுதி லிகிதர்) - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் சிறீஸ்கீதா (பிரான்ஸ்), கோகிலதாசன் (பொறியியலாளர் - கொலண்ட்), தாமரைக் கண்ணன் (U.K), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆனந்தராசா (பிரான்ஸ்), ரூபா (கொலண்ட்), தவரஞ்சனி (U.K), ஆகியோரின் மைத்துனரும் சிந்தியா, ஆர்த்தி, ஆகியோரின் மாமனும் சாயிதா, சாகிதன் ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் வியூ,*
*'இரத்தின வாசா'*
*சுன்னாகம்.* [76658]

தகவல்:
திருமதி சின்னத்துரை இரத்தினம் *(தாய்).*

### பண்டாரி இராசையா (இராசு)



குருசுமதவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பலாலி றோட், 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி இராசையா (இராசு) 18.07.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும் இராசகுமார், இராசமோகன், இராசகலா, இராசதயா, இராசநிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, ரேவதி, இராஜேஸ்வரன், சாந்தி, உதயசிறி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - இ.இராசகுமார் *(வ்யறிங் குமார்).*
மருமக்கள் - இராஜேஸ்வரன், உதயசிறி.
(சி/553815)

### சின்னராசா கேதீஸ்வரன் (மலையான்)



சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னராசா கேதீஸ்வரன் 30.06.2008 டோகாவில் காலமானார்.

அன்னார் சின்னராசா - புஸ்பாதேவி தம்பதியரின் அன்பு மகனும் பாஸ்கரன், றொபிட்டா, றொபின்சன், ரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதனின் மைத்துனரும் கணேஸ், கதிரமலை ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யுவசக்தி ஒழுங்கை,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.* [76461]

தகவல்:
பிரசாத் *(அண்ணன்),*
மதன் *(மைத்துனர்).*

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சுப்பையா கனகரத்தினம்**
*(நிர்வாகி, நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் )*

நல்லூரைப் பிறப்பிடமாகவும், புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கனகரத்தினம் அவர்கள் 19.07.2008 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

நேமிநாதன் பிரியயாழினிகுடும்பம்,
ராஜ்குமார் நவமணிகுடும்பம்.

*547, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

## விற்பனைக்கு

வர்ண மீன்கள், மீன்களுக்கான மருந்துகள், மீன் தொட்டி உபகரணங்கள் ஆடு, மாடு, நாய்களுக்கான பூச்சி மருந்துகள், தடுப்பூசிகள், வர்ண செவ்வரத்தைகள், பூஞ்செடிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

**திருப்பதி**
*மெமோறியல் லேன், மானிப்பாய்.*

## காணி, வீடு வளவு விற்பனைக்கு

சரசாலை தெற்கு, கொடிகாமம் வீதியில் 20பரப்பு தென்னங்காணியும், சரசாலை தெற்கில் நாற்சார் வீடும், 6பரப்புக் காணியும்- வயலும் உடனடி விற்பனைக்குண்டு

**வி. ஸ்ரீசக்திவேல்**
*45, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.*
தொ.பே:- 021 222 2797

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு, சிங்கன் கண்டி தோட்டப் பயிர் செய்யும் காணி 25 பரப்பு விற்பனைக் குண்டு. பிரித்தும் வழங்கப்படும்.

Tel: 0114967022
No. 40,
Dr. C.A.Cooray Mawatha,
Colombo - 06.

## சமய சந்நிதிகளில்

அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (230)

* * *

மந்திகை, ஜூலை20

வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன.

நண்பகல்சுவாமி வீதியுலா வருதல் இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். (203-218)

## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர்
**பாலசுந்தரம் ஜெயக்குமார்**
அவர்களின் அன்புத் தந்தை
**கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**IDM STUDENTS.**

## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

### Repeat Examinations Under the Old Structure of the Degree Programmes

Attention of the students is drawn to our newspaper advertisement dated 09.09.2005 which appeared in the National newspapers in September 2005. Through this advertisement it was notified to the students repeating examinations that the following shall be the last examination under the old structure for the respective years.

+ First Examination in Science, 2006
+ Second Examination in Science, 2007
+ Third Examination in Science, 2008

The First/Second/Third Examinations in Science, (Repeat), 2006 was conducted in April 2007. Therefore the First Examination in Science under the old structure will not be conducted anymore. The Second / third Examination in Science (Repeat) 2007, will commence on 08th Septemper 2008. The time table will be displayed on the Faculty Notice Boards on 25th August 2008.

❋ Students who commenced their first year of studies in or after 2001 could apply to sit for the Second/Third Examination in Science (Ropeat), 2007. Duly completed application for registration for examinations, along with receipt for payment of examination fee, shall be submitted to the office of the Dean, Faculty or Science on or before **10th August 2008**. Those who are unable to submit their application on or before the above date are requested to send the following details by fax (Fax No: 021-222-2685) and produce the receipt for payment of examination fee on or before **04th September 2008.**

I. Full Name
2. Registration Number
3. Index Number
4. Year of commencement of First year studies
5. The Course Units to be repeated
6. NIC Number


❋ Students who commenced their studies in or before 2000 may appeal to the Faculty Board of Science / Senate on or before 30 July 2008 for mercy chance to sit for the above repeat examinations once, if they have valid reasons.

❋ Students who have not completed the First Examination in Science under the old structure may also appeal to the Faculty Board of Science / Senate for a mercy chance on on before 30th July 2008, if they have valid reasons.

Further details could be obtained from the Office of the Dean ( Tel.No. 021-222-2685).

**Registrar.**
**18.07.2008**

(C/553816)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.டி.எம்.ஏ. பாவனையாளர்களை பொலிஸ் அனுமதிபெற அறிவுறுத்து

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா ரெலிக் கொம்மின் சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளைப் பயன்படுத்துவோர் பொலிஸ் அனுமதி (கிளியரன்ஸ்) பெற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்று ஸ்ரீலங்கா ரெலிக் கொம்மின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் தற்போது வழங்கப்படுகின்றது.

ரெலிக்கொம் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்ட சுமார்7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகள் கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக செயலிழந்த நிலையில் உள்ளன.

பாதுகாப்புத் தரப்பின் அனுமதியுடனேயே முன்னர் இந்தத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டன. எனினும் கடந்த மாதம் நடுப்பகுதியில் இருந்து இந்தத் தொலைபேசி இணைப்புக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்புக்களை மீண்டும் வழங்குவதற்கு பொலிஸ் 'கிளியரன்ஸ்' பெறப்பட வேண்டும்மென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான விண்ணப்பப்படிவம் ரெலிக்கொம் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.

விண்ணப்பப்படிவத்தை பெறுபவர்கள் அதனைப் பூர்த்தி செய்து தத்தமது கிராமசேவையாளரிடம் கொடுத்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் பிரதேச செயலரின் கையெப்பத்தையும் பெறவேண்டும். பின்பு தமது பிரிவு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொலிஸ் 'கிளியரன்ஸ்' பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் விண்ணப்பத்தை ரெலிக்கொம் நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத் தில் ஒப்படைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (50)


**வெள்ளெழுத்து மூக்குக் கண்ணாடிகள் பொலிசிங் குளோத் என்பன விற்பனைக்குண்டு.**

ஒரு கண்ணாடி 300/=
தொண்டு நிறுவனங்களுக்கு
விசேட விலை :- 250/=
பொலிசிங் குளோத் (1 Bag 25 துண்டுகள்) - 100/=

இல. 516/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. - 021 222 7631
(சி-553829)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு
விஞ்ஞான பீட மாணவன்
க.ஜெயகாந்தன்
அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி கனகராசா மகாலட்சுமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதியாண்டு மாணவர்கள்,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.
(76472)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகராசா மகாலட்சுமி



வேலணை கிழக்கு,5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் குமரன் தியேட்டர் வீதி, பெரிய கடை, மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட வருமான திருமதி கனகராசா மகாலட்சுமி 16.07.2008 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நாகராசா கனகராசாவின் (ஆனந்தா ஸ்ரோர்ஸ் - உயிலங்குளம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கா.பொ.தர்மலிங்கப்பிள்ளை - கண்மணிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணை ப.மு.நாகராசா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பரணிதரன் (விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நானாட்டான்), காயத்திரி, ஜெயகாந்தன் (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜமுகன் (ஜோதி புக் சென்றர், மன்னார்) அவர்களின் அன்பு மாமியாரும், சிவலிங்கம் (பொறியியலாளர், லண்டன்), பாக்கியலட்சுமி (புத்தளம்), மகாலிங்கம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (ஜேர்மனி), தனலட்சுமி (சண்டிலிப்பாய்), விஜயலட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதராஜா (கனடா), புஸ்பராணி (திருகோணமலை), யோகராணி (வவுனியா), செல்வராணி (ஆசிரியர், மன்னார் தாழ்வுபாடு புனித வள நார் றோ.க. த.க. பாடசாலை) மற்றும் திலகவதி, பரமசிவம், இந்திரா, ஸ்ரீதேவி, குணரட்ணம், மேகநாதன் ஆகியோரின் மைத்துனியும் திரு.திருமதி பரஞ்சோதிநாதன் தனபாக்கியலட்சுமி அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரன் தியேட்டர் வீதி,
பெரியகடை,மன்னார். (76477)

தகவல்: கணவர், பிள்ளைகள்,மருமகன்,
குடும்பத்தினர்.தொ.பே.இல.: 023 222 2304.

## நந்தவனம் சிறுவர் பூங்கா யாழ். ஆஸ்பத்திரியில் இன்று திறப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள நந்தவனம் சிறுவர் பூங்கா இன்று முற்பல் 10.30 மணிக்கு திறக்கப்படவிருக்கிறது.

சிகிச்சை பெற வரும் சிறுவர்களுக்காகவும் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் சிறுவர்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்காவை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் திறந்துவைப்பார்.அதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.எஸ். யமுனானந்தா ''யுத்தம் மற்றும் சமூக மருத்துவம்'' எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்த்துவார். (1)


**தேவை**

கணனி Type Setting
செய்யக்கூடியவர் தேவை. (பெண்)
நேரில் வரவும்.
T.P.: 222 7442
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.

**மணமகள் தேவை**

1978விசாக நட்சத்திரம், செவ்வாய் குற்றம் இல்லாத, U.S.A.இல் வதிவிட விசாவுடைய நுண் இலத்திரனியல் பொறியியலாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு வைத்திய கலாநிதி (Dr.) பெண் தேவை.
தொடர்பு:- 021 222 3409

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, வின்சர் சந்தியில் 3 கடைகளும், கே.கே.எஸ். வீதியில் 3 மாடிக் கடைக் கட்டடமும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 2709


**இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்தும்**

கந்தையா ஸ்ரீகந்தவேள்
எழுதிய
**“ தேரார் வீதியில்”**
நாடக எழுத்துருக்கள்

**நூல் வெளியீடு**

இன்று (20.07.2008)
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி.

அறிவாலயம்
இணுவில் கந்தசுவாமி கோயிலடி

**தலைமை:**
செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்
(அதிபர்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**பிரதம விருந்தினர்**
மூதறிஞர்
சிற்பி சிவசரவணபவன்

**சிறப்பு விருந்தினர்**
கலாநிதி
குழந்தை
ம.சண்முகலிங்கம்

விளம்பர அனுசரணை:
GANESAN CENTER
K.K.S. ROAD,
INUVIL.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை அருளம்பலம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வேலுப்பிள்ளை அருளம்பலம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) 18.07.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், அமரர்களான பொன்னம்பலம், சுப்பிரமணியம், தில்லையம்பலம், இலட் சுமிப்பிள்ளை, தங்கப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, அன்னரத்தினம் மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), நாகேஸ்வரி(இளவாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கணேசமூர்த்தி (பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம்), கணேசராசா (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), கிருபாமலர் (கொழும்பு), கிருபானந்தராசா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயவதனி (கொழும்பு), சுமதி(ஆஸ்திரேலியா),சிவராசா (ஓய்வு பெற்ற அதிபர்), சுபாசினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜன்(U.K.), அருசியன் (கொழும்பு), யதுஷா(கொழும்பு), சுபோதினி (கொழும்பு), மிதிலா(ஆஸ்திரேலியா), லகுராம் (ஆஸ்திரேலியா), யதூஷன் (ஜேர்மனி), காருண்யா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை இல. 59, காலி வீதி, கல்கிசை மலர்ச்சாலையில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (76478)

தகவல்:
அ.சரஸ்வதி(மனைவி), கணேசமூர்த்தி (மகன்) T.P.: 071 4347340
சிவராசா (மருமகன்) T.P.: 2559360

### திருமதி கண்ணம்மா குணரட்ணம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண் ணம்மா குணரட்ணம் நேற்று(19.07.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லப்பா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.07.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (76474)

தகவல்:
கு.பாலசிங்கம் (அழகன் - மகன்).

### முத்துத்தம்பி ஜெயராசா (ஜெயபால்)



கோப்பாய் மத்தி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஜெயராசா (ஜெயபால் நேற்று(19.07.2008) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் முத்துத்தம்பி-தையலட்சுமி தம்பதியரின் மகனும் புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நவரத்தினம் - இராசாத்தி தம்பதியரின் அன்பு மருமகனும் பரலோகவதியின் அன்புக் கணவரும் ஜெனாஷன், மாதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம், தியாகராசா, இந்துமதி, உசாமதி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரஞ்சினி, கமலகுமாரி, சோதிலிங்கம், விக்கினேஸ்வரன், மாலினி, ரகுராமன், சிவயோகவதி, சிவராமலிங்கம், றஜனி, மயூரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி. (76471)

தகவல்:
மு.தனபாலசிங்கம்
(சகோதரன்).

### வேலுப்பிள்ளை மகாதேவன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர்)



இளவாலை வடக்கு, இளவாலையைப் பிறப்பிடமாகவும், சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகாதேவன் நேற்று (19.07.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயசக்தியாவின் அன்புக் கணவரும், பிறேமிளா, கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சங்கர், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சிவபாக்கியம், செல்வபாக்கியம், டாக்டர் குணசிங்கம், பாலசிங்கம் மற்றும் சரஸ்வதி (இளவாலை), தருமராசசிங்கம் (கொழும்பு), நவரத்தினசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் கமலாகரன், பாஸ்கரன், ஜெயசக்தியா, ஐங்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
(76471) திருமதி ஆ.சரஸ்வதி (சகோதரி இளவாலை).


PC SOLUTIONS
Flashdrives Kingston 1GB-900 2GB-1400 4GB-1500
NOW AVAILABLE IN BEST PRICES
- Processor - Motherboard - Memory - Harddisk - Casing - UPS - Keyboard
- Mouse - Speaker - Headphone - Modem - Printer - Soundcard - TVcard
Microsoft COMPAQ TOSHIBA DELL CREATIVE IBM ASUS hp ASRock SONY AMD
PC Assembling Computer Networking PC Upgrading Software Development PC Trouble shooting Virus Protection PC Service & Software installation
சேவைகளை ... நம்பிக்கைக்குரிய ஒரே இடம்!
PC SOLLUTIONS Computer Sales & Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தல் ஜுரத்தில் தமிழகத்தில் சூடு பிடித்திருக்கும் மீனவர் பிரச்சினை

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது பற்றிய விவகாரம் தமிழகத்திலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது

தமிழகத்தில் சகல அரசியல் கட்சிகளுமே-ஆளும் தரப்பு, எதிர்தரப்பு என்ற வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளுமே-இவ்விவகாரத்தில் ஒரே சமயத்தில்-ஒரேசீற்றத்துடன் எதிர்ப்புக் கிளப்பியிருப்பதை சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால் போல தமிழகத்தின் ஆளும் தி.மு.க.தமிழகம் முழுவதும் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கின்றது.

தமிழக மீனவர் பாதுகாப்பு விவகாரத்தை ஒட்டி இப்போது தமிழகம் எங்கும் ஒருமக்கள் கிளர்ச்சியே உருவாகியிருப்பது போன்ற தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தமிழக மீனவர் பாதுகாப்புப் பிரச்சினை முன்னெப்போதும்இல்லாத அளவுக்கு இப்போது தமிழகத்தில் பெரும் உணர்ச்சிபூர்வ விவகாரமாக்கப் பட்டிருக்கின்றது.

இப்படித் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், அவர்களது வலைகள், படகுகள், பிடிக்கப்பட்ட மீன்கள் என்பன இலங் கைக் கடற்படையினரால் சூறையாடப்படுவதும், புதிய விடயங்கள் - விவகாரங்கள் - அல்ல. கடந்த பல ஆண்டுகளாக இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப் பட்டுவரும் தொடர் அட்டூழியம்தான் இந்த அனர்த்தங்கள்.

இன்னும் விவரமாகச் சொல்வதானால் இப்போது இடம்பெற்றிருக்கும் - தமிழகமீனவர்களுக்கு எதிரான - அராஜகங்கள், அத்துமீறல்களை விட, மிக மோசமான அட்டூழியங்கள், கொடூரங்கள் முன்னர் நடந்திருக்கின்றன.

ஆனால் அப்போதெல்லாம் ஏற்படாத கிளர்ச்சியையும், எழுச்சியையும் தமிழகத்தின் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து இப்போது தூண்டி நிற்கின்றன. இது ஏன்?

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' -என்பார்கள். அதுபோல, தமிழக மீனவர்கள் பாதுகாப்புக் குறித்துத் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் இப்போது ஒரேயடியாகத் திடீர் கரிசனையும், கவனமும், ஈடுபாடும், அதீத உணர்வும் ஏற்பட்டமைக்குக் காரணம் உண்டு.

இந்தியாவில் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் எந்நேரமும் நடக்கலாம்என்ற 'தேர்தல் ஜுரம்தான்' இப்படித் தமிழக மீனவர் குறித்த கரிசனைப் பிதற்றலுக்குப் பிரதான காரணமாகும்.

தமிழக மீனவர்கள், அருகில் உள்ள ஒரு சிறிய தேசத்தின் கடற்படையால்-அந்நிய சக்தியால்-வரன்முறையின்றித் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும், அராஜகங்களுக்கு உட்படுத்தப்படுவதும், அவர்களது உடைமைகள் கொள்ளையிடப்பட்டு சூறையாடப்படுவதும், தமிழகத்தில் உணர்ச்சியைத் தட்டிவிடக்கூடிய அரசியல் விடயங்களாகும்.

அந்த உணர்வுபூர்வ விவகாரத்தை மாற்றுக் கட்சிகள் கிளறி அரசியல் லாபம் தேட விடக்கூடாது, தாமே அதனை வசமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கம் கருதியே தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் இவ் விடயத்தில் அதிகம் தலையை நுழைத்துத் துள்ளிக் குதிக்கின்றன.

மத்தியில் - புதுடில்லியில் - அதிகாரத்தில் இருக்கும் காங்கிரஸ் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பு என்ற விஷப் பரீட்சையை நாளை சந்திக்கவிருக்கின்றது. அதில் தப்பிப் பிழைக்குமா என்பது தெரியவில்லை. அரசு தோற்றால் உடனடிப் பொதுத்தேர்தல் தவிர்க்கமுடியாததாக இருக்கும். தப்பிப் பிழைத்தால் கூட அதன் பின்னரும் அந்த அரசின் ஆயுள் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற மாதிரித்தான். உதிரிக் கட்சிகளின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டிய அந்த அரசு, எந்நேரமும் கவிழ்ந்து விடும் ஆபத்து உண்டு. அந்த ஆபத்தை சமாளித்துச் சரிக்கட்டினாலும் இந்தியாவின் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஏப்ரலுடன் முடிவுக்கு வந்துவிடும்.

எப்படிப் பார்த்தாலும் இன்னும் ஓராண்டுக்குள் எந்நேரத்திலும் - எந்தச் சமயத்திலும் - இந்தியாவில் பொதுத்தேர்தல் நடந்தேயாகும். அதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது.

இப்படித் தவிர்க்கமுடியாத பொதுத்தேர்தல் ஒன்று வருவது, ஏற்கனவே தனித்து அறுதிப் பெரும்பான்மையின்றியே தமிழகத்தில் ஆட்சியைத் தொடரும் தி.மு.க. கட்சியின் மாநில அரசுக்கும் பலத்த நெருக்கடிகளைத் தரக்கூடும்.

இந்தத் தேர்தல் எதிர்பார்ப்பு அதையொட்டி எழுக்கூடிய சிக்கல்கள் போன்றவற்றின் பின்புலத்திலேயே தமிழக மீனவர்களின் பாதுகாப்புக் குறித்து தமிழக அரசியல் கட்சிகளுக்கு அதீத ஈடுபாடு உருவாகியிருக்கின்றது.

இதுவரை காலமும் - பல ஆண்டுகள் - தமிழகமாநிலத் தில் தமது ஆட்சியை நடத்திக்கொண்டு, மத்திய அரசிலும் அதிக செல்வாக்கைச் செலுத்தி வந்த தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதிக்குக் கூட தமிழக மீனவரின் நலனுக்காகக் கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டும் என்ற கரிசனையும் கவனமும் இப்போது உதித்து விட்டது!

''கச்சதீவு விவகாரத்தில் தமிழக மீனவர்களின் உரிமையை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய நேரமும் வேளையும் வந்துவிட்டது!'' - என்று தமிழக முதல்வர் இப்போது தான் கூறுகின்றார். இதுவரை தூங்கிக்கொண்டிருந்த தமிழக முதல்வர், இப்போதுதான் நித்திரை விட்டெழுந்தவர் போல, கச்சதீவு விடயத்தில் தமிழக மீனவரின் உரிமைகளை மீட்கும் தருணம் இப்போதுதான் வந்திருக்கின்றது - என்று இச் சமயத்தில் கூறுகின்றார்.

கச்சதீவு விவகாரத்திலும் தமிழக மீனவர்களின் பாதுகாப்பு விடயத்திலும் இதுவரை உறங்கிய தமிழக முதல்வரை பொதுத்தேர்தல் ஜுரம் நித்திரையை விட்டு எழுப்பி விட்டது போலும்.

இனித் தேர்தல் திருவிழாக் களைகட்டி நடந்து முடியும் வரை தமிழக மீனவர்களின் பாதுகாப்புப் பற்றிய விவகாரம் தமிழக அரசியல் கட்சிகளினால் பட்டி, தொட்டிகள், மேடைகள், அரங்குகள் எங்கும் முழங்கும் என எதிர்பார்க்கலாம்.

தேர்தல் முடிந்ததும் அவையும் அடங்கிவிடும். தமிழக மீனவர்கள் ஆழ்கடலில் இலங்கைக் கடற்படையினரிடம் வாங்கிக்கட்டிச்சாகும் அவலமும் அதன் பின்னரும் 'வழமை போல' தொடரவேண்டியதுதான்.

## தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்கு இந்தியத் தூதரகம் வாயிலாக நடவடிக்கை

### இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி உறுதி

கொழும்பு, ஜூலை20

தமிழக மீனவர்கள் பாதுகாப்புக்கு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய கப்பல், சாலைப் போக்குவரத் துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலுவிடம், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி உறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக இருவருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தவும், மீனவர்களின் பாதுகாப்புக்கும் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டி.ஆர். பாலு இச்சந்திப்பின்போது கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக தி.மு.க. உயர் நிலைக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்றும் அவர் விளக்கம் கூறினார்.

தி.மு.க வின் கருத்துக்களை மத்திய அரசின் கவனத்துக்கு உடனடியாக கொண்டுவரும் வகையிலும் தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் மாநிலம் தழுவிய உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று டி.ஆர். பாலு தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின் உயிர், உடைமை பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த விடயத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி தூதரக அலுவலகம் வாயிலாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்-என்று பிரணாப் முகர்ஜி உறுதி அளித்தார்.

தி.மு.க உயர்நிலைக் குழு தீர்மானத்தின் பிரதிகள் மன்மோகன்சிங், சோனியா ஆகியோரிடமும் கையளிக்கப் பட்டுள்ளன

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை டி.ஆர் பாலு தலைமையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விவ காரத்தில் பிரதமர் தலையிட்டு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கோரும் கடிதத்தையும் அவரிடம் வழங்கவுள்ளனர். (203)

## வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது

### இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறும்

அச்சுவேலி, ஜூலை20

வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவின் முதல்நாள் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை ஆரம்ப மானது.

கோப்பாய் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து தமிழர்களின் கலாசார விழுமியங்களைச் சித்திரிக்கும் ஊர்திகளின் பேரணி முற்பகல் 10.20 மணிக்கு மேற்படி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகியது.

கல்வி தொடர்பான அபிவிருத்திகளைச் சித்தரிக்கும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் ஊர்தி பேரணியில் முன்செல்ல அதைத் தொடர்ந்து அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்திக் கூ.சங்கம், தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம், வலி.கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விவசாய பாரம்பரியத்தைச் சித்தரிக்கும் காட்சிகளை கொண்ட ஊர்தி, கோப்பாய் பனை தென்னை வள அ.கூ. சங்கம் உட்பட ஏழு ஊர்திகளும் இறுதியாக தமிழன்னை உருவத்தைத் தாங்கிய கோப்பாய் பிரதேச செயலக ஊர்தியும் சென்றன.

ஊர்வலத்தில் தீப்பந்த விளையாட்டு, ஒயிலாட்டம், கம்படி, கரகாட்டம், குதிரையாட்டம், கும்மி, செம்பு நடனங்களும் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ் .மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் என். சண்முகலிங்கன் உட்பட மதகுருமார்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

வீதியெங்கும் தோரணம்கட்டி வீட்டு வாசல்களில் பூரண கும்பம்வைத்து வரவேற்றதுடன் பெருந்திரளான மக்க ளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

**இன்றைய நிகழ்வுகள்**

இருபாலை சேனாதிராஜா முதலியார் அரங்கில் அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. இன்று ஞாயிறுக்கிழமை இரண் டாம் நாள் நிகழ்வுகள் இடம் பெற வுள்ளன.

காலை 9 மணிதொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் மொழி- இலக்கியம்- பண்பாடு ஆய்வரங்கு இடம்பெறும்.

பிரதேச செயலர் தலைமையில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆய்வரங்கில் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்வுகள் சுவாமி ஞானப் பிரகாசர் அரங்கில் இடம்பெறவுள்ளன.

இதில் அரச அதிபர் கே. கணேஷ் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதில் 'செம்புலம்' மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ. குணநாதன் நிகழ்த் துவார். பண்பாட்டுப் பேரவைத் தலைவர் சி.ஏ. மோகன்றாஸ் மலரை வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை அரச அதிபர் கே. கணேஷ் பெற்றுக் கொள்வார்.

பண்பாட்டைச் சித்திரிக்கும் வகையிலான கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ-11-111)

• இன்றைய உதயனின் 11 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள கலைஞர் செவ்வியை எழுதியவர் சீலன் ஆவார்

## உரமானியப் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கல்வயல் கமக்கார அமைப்புக்குட் பட்ட நெற்செய்கையாளர்களுக்கு காலபோக நெற்செய்கைக்கான விதைநெல் மற்றும் உரமானியம் தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் இன்றும் நாளை யும் விநியோ கிக்கப்படும் என செயலாளர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூலை 20

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* கொக்குவில் இந்துமைதானம் - கொக்குவில் இந்து எதிர் அரியாலை கனகரத்தினம் ம.வி.
* மகாஜன மைதானம்- யாழ்.இந்து எதிர் தெல்லிப்பழை மகாஜன
* ஸ்கந்தவரோதயா மைதானம் - சென்.பற்றிக்ஸ் எதிர் ஸ்கந்தவரோதயா
* நெல்லியடி ம.வி. மைதானம்- சென்.ஜேன்ஸ் 'பி' அணி அதிர் நெல்லியடி ம.வி.
* விக்டோறியா மைதானம் - ஹட்லிக் கல்லூரி எதிர் விக்டோறியா (1-86)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 06 | 21.07.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.ப 03.28 வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| சுபநேரம் : | 12.01 - 01.31 |
| ராகுகாலம் : | 07.31 - 09.01 |


## உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர்ந்து வாழ்வதற்குப் பழகுவோம்

இறைவனால் படைக்கப்பட்டவன் மனிதன். எனவே தமது சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்ட மனிதன். உண்மையோடும் நீதியோடும் வாழ வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார். ஆகவே இவ்வுலக வாழ்வில் மனிதன் நீதிக்குச் சான்று பகர வேண்டிய கடப்பாடு உடையவன் ஆகின்றான்.

ஏனெனில் இவ்வுலகம் அநீதியால் நிறைந்துள்ளது. இத்தகைய அந்த சூழலுக்கு மத்தியில் அநீதியைக் களைந்து விட்டு இறையாட்சியை அமைக்க புனித மத்தேயு நற்செய்தியின் மூலம் அழைப்பு விடுக்கின்றார் ஆண்டவர்.

உழவன் நல்ல விதைகளையே விதைக்கின்றான். ஆனால், எதிரிகள் வந்து களைகளை விதைத்துச் செல்கின்றனர். தன்னுடைய அதிர்ச்சியான இழப்புக் கள் நிறைந்த சூழலில் கூட உழவன் பொறுமையோடு கனிவாக முடிவெடுக்கின்றான். அநீதமானவர்கள் தண்டிக்கப்படாமல் விடப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால், ஒரு நீதிமான் தண்டிக்கப்படக்கூடாது என்பதில் இறைவன் கண்ணும் கருத்துமாக இருப்பது தெளிவாகப் புலப்படுகிறது.

இன்று நம்முடைய வாழ்வைச் சற்றுச் சிந்திப்போம்: ''நீதியை விலை பேசுபவன் ஒரு சமூக விரோதி, இந்த சமூக விரோதியைக் கண்டு கொள்ளாது விட்டால் நாமும் சமூகக் குற்றவாளிகள்'' என்கிறார் விவேகானந்தர். நாமும் பல்வேறு வேளைகளில் நீதிக்கு எப்போதுமே எதிரான நீதியை ஆதரிக்கின்றோம். நீதியை புரட்டிப் போடுகின்றவர்களின் கருத்துரைகள், கருத்தியல்களை, சொல்லடங்கல்களை, மேற்கோள்களை, பழமொ ழிகளை எளிதாக ஏற்றுக் கொள்கிறோம்.




இத்தகைய மயக்க நிலைகளில் தனக்கு அநீதி விளைவிக்கின்ற போது கூட ''தலைவிதியே'' என்று ஏற்றுக் கொள்கிறோம். துன்பம் வரும்போது நமது இலக்குகளை, முடிவுகளை, எளிதாக மாற்றிவிடுகிறோம். இந்த பரிதாப நிலையி லிருந்து விடுபட்டு உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர்ந்து வாழ்வோம்.

நசரேன்.

## செந்தமிழ் பரிபாலன சபையும் செந்தமிழ் சங்கமும்

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

1917 ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி செந்தமிழ்ப்பரிபாலன சபை உருவாக்கப்பட்டது.

1917ஆம் ஆண்டுஜூலை இருபத்தொராம் திகதி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களும் பண்டிதர்களும் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒன்று கூடி செந்தமிழ்ப்பரிபாலன சபையை உருவாக்கினர்.சேர்.பொன். அருணாசலம் செந்தமிழ்ப் பரிபாலனசபை தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் என்பன பற்றி புதிய கோணத்தில் ஆய்வுகளை மேற் கொள்வதே செந் தமிழ் பரிபாலன சபையின் நோக்கம்.

### தலைமை வகித்த பெரியார் எவர்?

யாழ்ப்பாண செந் தமிழ்ச் சங்கத்திற்கு குமாரசாமிப்புலவர் தலைமை வகித்ததாக குமாரசாமிப்புலவரின் வாழ்க்கைச் சரிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செந்தமிழ்ப் பரிபாலன சபைதான் செந்தமிழ்ச்சங்கமென பெயர் மாற்றப்பட்டதா அல்லது செந்தமிழ்ப் பரிபாலன சபை வேறு செந்தமிழ்ச்சங்கம் வேறா என்பது தெரியவில்லை. ஆனால் இரண்டும் சமகாலத்தில் இயங்கிய அமைப்புகள். எனவே செந்தமிழ்ச்சங்கம் பரிபாலனசபையாகவோ அல்லது செந்தமிழ் பரிபாலனசபை செந்தமிழ் சங்கமாகவோ பெயர்மாற்றம் பெற்றிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தான் கூடுதலாகக் காணப்படுகின்றன.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கலடிக் கொலை சந்தேக நபர்களில் இருவர் அரச சாட்சிகளாக மாற விருப்பம்

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பு, செங்கலடிப் பகுதியில் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு பின்னால் புதைக்கப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அறுவரில் இருவர் அரச தரப்புச் சாட்சிகளாக செயற்படுவதற்கு நீதிமன்றத்திடம் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை மட்டக்களப்பு நீதிவான் எஸ்.இராமக்கமலன் முன்னிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அப்போது சந்தேக நபர்களில் இருவர் தாம் அரச தரப்புச் சாட்சிகளாக மாறுவதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

இவர்களின் வாக்கு மூலத்தை நாளை திங்கட்கிழமை பதிவு செய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான், சாட்சிகளாக மாறிய இருவரையும் ஓர் இடத்திலும் மற்றைய நால்வரையும் வேறு இடத்திலும் வைக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டார். (அ-1)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இரண்டு தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சுட்டுக்கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தமது தரப்பு விசாரணை நடத்தி வருவதாக இலங்கைத் தூதுவர் எடுத்துக் கூறினார். விசாரணையின் முடிவை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று செயலர் ரவி அவரிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்திய மீனவர்கள் பாதுகாப்புக்கும் அவர்களின் சேமநலன்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. அதனை மனதிற் கொண்டு மனிதாபிமான முறையில் இலங்கை செயற்பட வேண்டும் என இலங்கைத் தூதுவரை இந்தியச் செயலர் ரவி அறிவுறுத்தினார். (அ-1)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் இக் குழுவினர் சபாநாயகர், அமைச்சர்கள், எம்.பிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட பலரையும் சந்தித்துப் பேசவுள்ளனர். இக் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## இளைஞர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு காணாமற்போயுள்ளனர். காரைதீவு பிரதேச சபைத் தலைவர் ந.ஜீவராசா கடற்படையின் உதவியுடன் கடலில் தேடுதல் நடத்தினார்.

அடுத்தமாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த செல்லத்துரை ஜனார்த்தனன், காண்டீபன் தனுஷாந் ஆகிய இருவருமே கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டவர்கள் ஆவர்.

இச் சம்பவத்தால் காரைதீவுப் பிரதேசம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற திருவாதிரைத் தீர்த்தத்தின் போது 11 இளைஞர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலாளர் பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற இருக்கும் 'சார்க்' உச்சிமாநாட்டின் பின்னர் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதற்கு முன்னரும் தெற்காசிய நாடுகளுக்கு இடையில் புலனாய்வுத் தகவல்கள் பரிமாறப்பட்ட போதிலும் எதிர்வரும் காலங்களில் அவற்றை கிரமமாக மேற்கொள்ளு வதற்கு முடிவாகி இருப்பதாகவும் ஹோகன்ன குறிப்பிட்டிருக்கிறார். இதன் மூலம் தெற்காசிய பிராந்தியத்தில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளை முடக்க எதிர்பார்ப்பதாக அவர் கூறினார். (அ-02)


PJ-CORNER IN

மீண்டும் உங்கள் கணனிக் கல்வியில் P.J-Corner!

அனைத்து பாடநெறிகளும் மிகக் குறைந்த கட்டணத்தில்!

Diploma in MS-Office, 3-months
Diploma in MultiMediaTech, 3-months
Diploma in Computer Hardware, 4-months
Diploma in Internet & E-mail, 2-months
Diploma in Graphic Designing, 3-months
Diploma in Web Designing, 4-months

BIIT
The Village Campus
ஆவரங்கால் சந்தி
ஆவரங்கால்.

உயர் தரப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு எமது வாழ்த்துகள்!

வெற்றியை மட்டுமே யோசி!
அதையே செயற்படுத்த துணி!



கற்சுமி வெளியீடு

தரம் 1,2,3,4,5மற்றும் 9,11(O/L) மாணவர்களுக்குரிய மாதாந்த வெளியீடுகளின் ஜூன்-ஜூலை மாத இதழ்கள்:-

G-1 அம்மா, G-2 அன்னை, G-3 தாய், G-4 அறிவு, G-5 தேடல், G-9 Talent, G-11 Target

வெளிவந்துவிட்டன

'உங்கள் பிள்ளைகளின் ஆற்றலை மேம்படுத்தும்.'

கற்சுமி கல்வி நிறுவனம், 166, நாவலர் வீதி, யாழ்.



English Classes

English classes will be conducted (Spoken and written)
From 02.08.2008
to the following category of people at the address given below.

- University students
- Young professionals in employment
- Degree holders wishing to enhance English knowledge (group and individual classes)

C.Nadarajalingam
Retd.Area manager,
Bank of Ceylon.

Kurumbacaddy,
Puloly.

(அ/553814)


## மீனவர் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகாலத்தில் காலை 8 மணிக்கு போராட்டம் ஆரம்பமானது.

சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே உண்ணாநிலைப் போராட்டத்தை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஆரம்பித்து வைத்தார்.

மாமல்லபுரத்தில் அமைச்சர் துரை முருகன், திருவொற்றியூரில் இந்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, முத்துப்பேட்டை யில் இந்திய அமைச்சர் பழனிமாணிக்கம், மீமிசலில் இந்திய அமைச்சர் ரகுபதி, அரக் கோணத்தில் இந்திய அமைச்சர் சுப்பு லட்சுமி ஜெகதீசன், விழுப்புரத்தில் தமிழ் நாடு அமைச்சர் பொன்முடி, வேதாரணயத் தில் தமிழ்நாடு அமைச்சர் கே.என்.நேரு, நாகப்பட்டினத்தில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்டோர் தலைமையில் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது. இராமேஸ்வரத்தில் தமிழ்நாடு அமைச்சர் சுப.தங்கவேலன் தலைமையில் உண்ணாநிலைப் போராட் டம் நடைபெற்றது.

இந்த உண்ணாநிலைப் போராட்டத்தை தமிழ்நாடு அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை 5.00 மணிக்கு இராமேஸ்வரத்தில் முடித்துவைத்தார். (1)

## அவசரமாகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொஹான் ஜயவிக்கிர இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது, கிழக்கு மாகாணசபை இயங்காததால் அதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட வில்லை.

கிழக்கு மாகாணசபை தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகம் ஒன்று தெரிவுசெய்யப்பட்ட போதிலும் நிதி ஒதுக்கீடு வழங்கப் படாததால் சபை தனது அலுவல்களை முழு அளவில்செயற்படுத்த முடியாதநிலை உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந் நிலையில் நிதி உதவி கோரி ஆளுநர் அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

சேதமுடைந்த வீதிகள், பொதுக்கட்டடங்கள், மயத்தலங்கள் போன்றவற்றை புனருத்தாரணம் செய்வதற்கும்-

மாகாணசபைத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் வாகனங்கள் , அலுவலகங்களை பராமரிக்கவும் - பெருமளவில் நிதி தேவைப்படுகின்றது.

எனவே உடன் போதிய நிதியை வழங்க வேண்டும் என்று ஆளுநர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை-

கிழக்குமாகாணசபையின் நிதி நெருக்கடி நிலைமை தொடர்பாக பேச்சு நடத்த நேரம் ஒதுக்கித் தருமாறு முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கூட்டாக கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (அ-1)


மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

22.07.2008 வரை மட்டுமே யாழ்ப்பாணத்தில் இருப்பார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசுகரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம்,நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexual Disorders (ஆண்மைச் சக்தி குறைவு)

(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்தவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.Contact No.: 0777 569205



ICDL @ JAFFNA NIIT

கல்வியமைச்சின் அங்கீகாரம் பெற்ற முதன்மை நிறுவனம் சர்வதேசத் தரம் வாய்ந்த சான்றிதழ்கள்.

certificate courses
VB 6.0, VB.Net, SQL Server, PageMaker, Java, J2EE & etc

எமது வழமையான DNIIT, மற்றும் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பம்
இம்மாதம் 25,26 ஆம் திகதிகளில்

347 2/1, kasthuriyar Road, Jaffna,222 7250

IT Concepts
Ms Word
Ms Excel
Ms Power Point
Ms Access
Internet & Email

The Open University United Kingdom
B.Sc (Hons) Computing & its Practice
DNIIT (hons)
Professional Diploma In IT
Honours Diploma In IT
Advance Diploma In IT

If u're not Studing @ NIIT u're missing something


## பாலமீன்மடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

மீட்கப்பட்ட மனித எச்சங்கள் சட்ட வைத்திய மற்றும் மரபணுப் பரிசோதனைக்காக நாளை கொழும்புப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப் பட விருக்கின்றன.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியான பாலமீன்மடு கிராமத்தில் பொதுமக்கள் கிணறு வெட்ட குழி தோண்டும்போது மனித எச்சங்களை அவதானித்தனர்.

அது தொடர்பாக பொலிஸாரும் மட்டக்களப்பு நீதிவான் சி.இராமக்கமலனும் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தியிருந்தனர் என்பது தெரிந்ததே.

மனித எச்சங்களை இரசாயனப் பகுப் பாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கு மாறு நீதிவான் அப்போது உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவுக்கு அமைய எச்சங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. (அ-1)

## சிறுபான்மையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகும். அரசாங்கம் பயங்கரவாத அமைப்பு ஒன்றுடன் போராடி வருகிறது என்பதனை அனைவரும் மனதில் கொள்ளவேண்டும்.

### மெதுமெதுவாகவே...

கெரில்லாக்கள் நாட்டின் வடக்கில் அங்கீகரிக்கப்படாத நடைமுறைத் தனியரசு ஒன்றை நடத்துகிறார்கள். அதனை உடைத்து விடுவதற்காக கடந்த வருடம் ஜூலை மாதம் தொடக்கம் பாதுகாப்புப் படையினர் போரிட்டு வருகிறார்கள்.

இந்த முயற்சி மிக மெதுவாகவே நடைபெற்று வருகிறது. கிரிக்கெட்டில் ஆரம்பத் துடுப்பாட்டக்காரரைப் போலவோ, நடு வரிசை ஆட்டக் காரரைப் போலவோ, ஆட்ட இறுதி வேளை துடுப்பாட்டக்காரர் விளை யாடுவதில்லை.

விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் படிப்படியாக குலைந்து வருகிறது. கடைசிக் கட்டத்தின் தொடக்கத்தில் நாம் இப்போது உள்ளோம். நாங்கள் திருப்பு முனையை அண்மித்துள்ளோம். இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் நிலைமை எப்படி மாறுகின்றது என்பதனை நீங்கள் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

எமது படைகள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் 40 கிலோ மீற்றர் (25 மைல்கள்) முன்னேறியுள்ளன.

### கரந்தடித் தாக்குதல் நடத்தும் நிலைக்கு

ஆகக் கடைசியாக நடைபெற்ற போரில், புலிகள் குறைந்தது 9,000 போராளிகளை இழந்திருப்பர். இப்போது அவர்களின் எண்ணிக்கை 5,000 ஆகத்தான் இருக்கும். தமது துணைப்படையாகச் செயற்படக் கிட்டத்தட்ட 200,000 பொதுமக்களை கட்டாயப்படுத்தி வைத்திருக்கின்றனர். 15வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 50 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி வழங்கியுள்ளனர். ஆனால் அவர்களை சண்டையிட ஊக்குவிக்க முடியாது.

புலிகளால் மரபு வழிப் போராட்டம் நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. அதனால் கரந்தடி முறையிலேயே தாக்குதலை நடத்துகின்றனர்.

ஆனால், அரசாங்கப் படைகளின் மனோதிடம் இப்போது அதிகரித்துள்ளது. எங்களுக்கு ஆளணியில் இப்போது பிரச்சினை இல்லை. மாதாந்தம் 3,000 பேர் புதிதாக படையில் சேர்ந்து கொள்கின்றனர். இப்போது படைகளின் பலம் 162,000 ஆகும் - என்றார் இராணுவத் தளபதி. (அ)


Laptop மூலமாக வீடுகளில் வந்து கற்பித்துக் கொடுக்கப்படும் Certificate Courses

Course Details
Dip.In Ms Office-1Month
Dip. In DTP - 1 Month
உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Word, Excel, Access, P.point, PageMaker, Photoshop CS3, CorelDraw X3, Internet & E-mail.

Video Editing
Tel:0779672038 (Nallur, Jaffna.)



யாழ் வெளியீடு

விஞ்ஞானம்

★ தரம் 11 இற்கான 10 மாதிரி வினாத்தாள்கள் (பகுதி 1)
★ விடைகள், கையேடு இலவசம்
★ வெளியீடு 01 ஓகஸ்ட் 05 புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.



CHEMISTRY
A/L 2008
T. நாகரெட்ணம் ஆசிரியர் அவர்களின் வினாத்தாள்களை பெற்றுக் கொள்ளலாம்.
நாவலர், ஆனைப்பந்தி.



விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து கோயில் வீதி ஆரம்பத்தில் இல.27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் 4 பரப்புக் காணியுடன் தனிக் கிணறு, தனி வீடு, வளவு வருமானத்துடனும் மற்றும் தொலைபேசி வசதியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 141B, பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. 0773151530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.